சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"
'எண்ணித் துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தொ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. 1092 சித்திரை: திருவனந்தபுரம்: MAY 1917. பகுதி 3.

பொருள் அடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
1.	மாதசரிதம்	11
2.	ஒரு வர்த்தமானபசாரப் பத்திரிகை	43
3.	The Past time	44
4,	நீதிமொழிகள்	,,
5.	சூரியமண்டலம்	45
6.	வான சஞ்சாரம்	50
7.	ஆகாரமும் பானமும் ...	53
8.	மாயமறைவு	55
9.	உத்தரராம சரிதம் ...	57
10.	பற்பல குறிப்புகள் ...	58

சந்தா விவரம்.

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. Nagasubramania Rao Bros,
PUBLISHERS, TIRVANDRUM.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subscription Rs. 2.

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	,,	3—0—0
Quarter page or ½ column	,,	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri, M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. T. NAGASUBRAMANIA RAO BROS

Publishers, Trivandrum.

மாதசரிதம்.

காலஞ்சென்ற திவான் பகதூர் V. நாகமய்யா அவர்கள்.

எதிர்பாராத சம்பவங்களே அநேகமாய் எளிதில் உண்டாகின்றன. மரணத்தைப்போல் நிச்சயமானதும் அது வரும் காலத்தைப்போல் நிச்சயமற்றதும் வேறொன்றுமில்லையென்று ஒரு ஆங்கலஞானி சொல்லியிருக்கிறார். அதற்கிணங்க நமது நாகமய்யா அவர்கள் சென்ற சித்திரைமீ 26-உ செவ்வாய்க்கிழமை காலை 7½ மணிக்குத் திடீரென்று விண்ணுலகெய்திய துக்கசமாசாரத்தை மிக மனவருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

சில மாதங்களுக்குமுன் நடைபெற்ற திருவனந்தபுரம் "லாகாளேஜ் டே" அன்று அவர்கள் அக்கிராசனம் வகித்தபொழுது அவர்களது அமிழ்தினும் இனிய பேச்சைக் கேட்கவும், அவர்களது உற்சாகம் பொருந்திய தோற்றத்தைப் பார்க்கவும் பாக்கியம் பெற்றவர்கள் இவ்வளவு திடீரென்று அவர்கள் புலாலுடம்பு நீத்துப் புகழுடம்பெய்துவரென்று எண்ணியிருக்கமாட்டார்கள். இவர்களது மரணத்தினால் இந்திய வித்வசிரோமணிகள் தொகையில் ஒன்று குறைந்துவிட்டது. அக்குறைபாடு எளிதில் நீங்கும் பெற்றியதுமன்று.

நமது நாகமய்யா அவர்கள் 1850-வது வருஷம் டிசம்பர்மாதத்தில் திருநெல்வேலியைச்சார்ந்த வீராகவபுரத்தில் ஜனனமானார்கள். இவர்களது முன்னோர்களில் அநேகர் திருவிதாங்கோட்டு ராஜகுடும்பத்துக்குப் பல சந்தர்ப்பங்களில் உதவிபுரிந்து நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள். 1799-வது வருஷத்தில் ஸ்ரீரெங்கபட்டண முற்றுகை காலத்து கம்பனியாரிடம் திருவிதாங்கோட்டின் நன்மைக்காகச் சில ஏற்பாடுகள் செய்வித்ததின் பொருட்டு, புகழ்பெற்ற ராமராஜா அவர்கள் நமது நாகமய்யா அவர்களின் பிதாவின் பாட்டனாருக்கு 42 சால்வைகளும் ஒரு தந்தப் பல்லக்கும் இனாமளித்தார்களாம். ஆகவே திருவிதாங்கோட்டு அரசாங்கத்துக்கும் நாகமய்யா அவர்கள் குடும்பத்துக்கும் உள்ள பந்தம் மிகப் பழமையானதென்று சொல்லவும் வேண்டுமா.

நமது நாகமய்யா அவர்களுக்கு மூன்று வயதானதும் அவர்களது பெற்றோர் திருவனந்தபுரத்தில் வாசம் செய்யத்தொடங்கினர். அக்காலத்தில் மஹாராஜா தருமப் பள்ளிக்கூடம் (Maharajah's Free School) என்று வழங்கிவந்த ஆங்கிலப் பாடசாலையில் ஜான் பென்சிலியினிடத்து ஆங்கிலம் படிக்கத்தொடங்கினர். அப்பாடசாலையில் உபாத்தியாயர்களாயிருந்த சங்கரசுப்பய்யர், F. வாட்ஸ் முதலியோரும் நமது நாகமய்யா அவர்களின் குருநாதர்களாம். 1860 முதல் 1870 வரை அவர்கள் மாணுக்கராயிருந்த காலமெல்லாம் ஒரு வருஷமாவது அவர்கள் பரீட்சையில் யாதியோடுஜெயம்பெற்று இனும் வாங்காமல் இருந்ததில்லை. ராஜபண்டிதரான விசாகம் மஹாராஜா அவர்கள் மாணவர்களுக்குப் பரிசளிக்கும் விஷயத்தில் மிகக் கவனம் செலுத்திவந்ததனால் நாகமய்யா அவர்கள்மீது அவர்கள் பிரத்தியேகம் திருஷ்டிவைக்கக் காரணமாயிற்று. 1865-வது வருஷத்தில் 'மெட்ரிக்லேஷன்' பரீட்சையில் தேர்ச்சியடைந்தனர். பெற்றோர் பணப்பெருக்குடையவர்கள் அல்லாதிருந்ததினால் உடன்தானே 7 ரூபா சம்பளத்தில் பென்சிலிதுரையிடத்து ஒரு குமஸ்தாவாக அமர்ந்தார். அவ்வுத்தியோகத்தில் சில மாதமிருந்த பின்னர் 'ஹைஸ்கூலில்' ஒரு உபாத்தியார் ஆனார். இவ்வுத்தியோகங்களில் இருக்கும் காலத்திலேயே F. A., B. A. பரீட்சைகளுக்குப் படித்து 1866-ல் F. A. யினும் 1870-ல் B. A. யினும் விஜயமடைந்தனர். 1870-ல் சென்னை சர்வகலாசாலைப் பரீட்சையில் சேர்ந்திருந்த திருவிதாங்கோட்டு மாணவர்களில் நாகமய்யா முதலாவதாக ஜெயித்ததனால் கல்லன் இனம் 80 ரூபாயும் அவர்களுக்குக் கிடைத்தது. அக்காலத்தில் B. A. க்கு வாக்குமூலப் பரீட்சையும் உண்டாம். நாகமய்யா அவர்களிடத்து வாக்குமூலப்பரீட்சை செய்தகாலத்து, அப்பொழுது கவர்னராயிருந்த லார்ட் நேப்பியர் வேறிரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களோடு பரீட்சாசாலைக்குச் சென்றாராம். அபொழுது நாகமய்யா அவர்கள் பரீட்சகர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அவர் வாய்மூடுமுன்தானே சாமாரியாகப் பதிலுரைப்பதைப் பார்த்து லார்ட் நேப்பியர் சந்தோஷமடைந்து—"இவர வயதுடைய ஆங்கலச சிறுவர்களுங்கூட இவ்வளவு திறமையாக உத்தரம சொல்லமாட்டார்கள். ஆகையால் இவருக்கு இந்தக் கேள்விகளுக்குள்ள மாக்கு முழுதும் கொடுக்கவேண்டும்" என்று பரீட்சகரிடம் கூறினாராம். நாகமய்யா அவர்

களுடைய புத்திநிட்சண்யத்துக்கு இதைவிடச் சிறந்த திருஷ்டாந்தம் வேண்டுமா.

நாகமய்யா அவர்களது திறமை யாவருக்கும் தெரியலாயிற்று. 1870-ல் தானே திவான் மாதவராயரவர்கள் அஜூர் இங்கிலீஷாப்பீசில் நாகமய்யா அவர்களை 50 ரூ. சம்பளத்தில் ஒரு குமஸ்தாவாக நியமித்தார். அந்த உத்தியோகத்தை அவர்கள் மிகத் திறமையாகவும் ஜாக்கிரதையாகவும் பார்த்துவந்ததினால் 1872 மே மாதத்தில் தனது 21-வது வயதில் கோட்டயம் தாசில்தாராக நியமனம் பெற்றார். அக்காலத்தில தாசில் உத்தியோகமென்றால் மிகவும் பொறுப்புடைய ஒரு உத்தியோகம். ரெவனியூ, கிரிமினல், சானிட்டேஷன் முதலிய துறைகளைத் தவிர தேவஸ்வம் பிரம்மஸ்வ வகுப்புக்களும், மற்றும் ஒரு தாலூகாவின் க்ஷேமத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் தாசில்தாரின் மேற்பார்வையிலேயே இருந்துவந்தன. ஆகையால் இவ்வுத்தியோகத்தை, Boy Tahsildar என பட்டப்பெயர் பெற்ற நாகமய்யா அவர்கள் எப்படி நடத்துகிறார்களென்று அவர்கள் மீது அன்பும் அபிமானமுடையோரெல்லாம் கவனித்துக்கொண்டே இருந்தார்கள். எனினும் தனது மேலுத்தியோகஸ்தர்கள் முதல் விசாகம் மகாராஜா அவர்கள்வரை யாவரும் மெச்சத்தக்கவிதமாய் தாசில்தார் உத்தியோகத்தில் நாகமய்யா அவர்கள் பெயர்வாங்கினார்கள். ஆனால் இவ்வுத்தியோகத்துக்குள்ள சம்பளம் மிகக் குறைவானதென்று அவர்களுக்குத் தோன்றியதனால் அதை விட்டுவிட்டு வக்கீல் வேலைக்குப் படித்து சென்னைக்குச் சென்று வியவகரிக்க எண்ணினார்கள். ஆயினும், அதிகத் தாமதமின்றி உத்தியோக ஏற்றம் லபித்ததினால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. விசாக மகாராஜா அவர்கள் சிபார்சைப்படி 1874-ல் சென்ஸஸ் சூப்பரின்டன்று உத்தியோகம் பெற்றார். இந்தியர்களுக்கு சென்ஸஸ் ஏற்பாடு புதிய துறை ஆனாலும், அதிலும் நாகமய்யா அவர்கள் விஜயம் பெற்றார்கள். திவான் சேஷய்யா சாஸ்திரி, ரெஸிடென்று ஆகல்மாக் கிரிகர் M. C. S. இந்தியா ஸ்டேட் செக்ரிட்டரி சாலிஸ்பரி பிரபு K. G. முதலியோரும் நாகமய்யா அவர்களின் சென்ஸஸ் ரிப்போர்ட்டை மிக வியந்து பேசினார்கள். விசாகம் மகாராஜா அவர்கள் பட்டத்துக்கு வந்ததும் (1881) ஜூலை மாதத்தில் 30-வது வயதில் அவர்களுக்கு டிப்யூட்டி பேஷ்கார் உத்தியோகம் கிடைத்தது. திருவனந்தபுரம் பத்மனாபபுரம் டிவிஷன்களில் பலமுறை ஆக்ட்டிங் திவான்பேஷ்காருத்தியோகம் நடத்தியபின்னர் 1883 மே மாதத்தில் ஸ்திரம் திவான்பேஷ்கார் ஆனார்கள். திருவனந்தபுரம் டிவிஷன் பேஷ்காராக இருந்தபொழுது இரண்டாவது முறை சென்ஸஸ் ஏற்பாட்டின் மேற்பார்வையையும் அவர்களுக்கே கொடுக்கப்பட்டது. அதிலும் நல்லபெயரெடுக்கத் தவறவில்லை. இவ்வாறு சென்ஸஸ் பழக்கம் அதிகமானதினால் 1890-ல் மூன்றாவது முறையும் அவர்களே சென்ஸஸ் கம்மிஷனரானார்கள். 1891-ல் வெளியான சென்ஸஸ் ரிப்போர்ட்டு இரண்டுபுத்தகங்களும், அவர்களது திறமைக்கு நித்திய ஞாபகச்சின்னங்களாக விளங்குகின்றன. அவைகளின் பெருமைகளைப்பற்றி சாலிஸ்பரி பிரபு, ரிப்பன்பிரபு, ஸர் M. E. கிரான்று டப், றயிற்று ஆனரபில் A. J. பால்பர், ஸர் எட்வின் ஆர்னால்டு, பென்ஷன் ஜட்ஜி T. செல்லப்பாபிள்ளை, ஸர் S. சுப்பிரமணிய அய்யர் முதலியோரும் மெச்சினார்கள். அதன் பயனாக 1892-ல் றயிற்று ஆனரபில் ஸர் M. E. கிரான்றுடப், G. C. S. I. அவர்களின் தூண்டுதலால் 'லண்டன் ருயல் ஹிஸ்டாரிக்கல் சொஸைற்றி' என்ற கலைஞர் கூட்டத்தில் நாகமய்யா அவர்கள் ஒரு அங்கத்தினர் ஆக்கப்பெற்றார்கள். இந்நாட்டில் இந்தக் கௌரவப் பட்டம் பெற்றவர்கள் இவர்களும் புரோபஸர் P. சுந்தரம் பிள்ளையவர்களுமே.

இத்தருணத்தில் கண்டெழுத்து திவான்பேஷ்காராயிருந்த சங்கரசுப்பய்யர் அவர்கள் திவானாகவே, அந்த உத்தியோகத்துக்கு நாகமய்யா அவர்கள் 1892 ஆகஸ்டு மாதத்தில் நியமனம் பெற்றார்கள். அத்துடன் திருவிதாங்கூர் சட்டநிரூபண சபையில் மெம்பர் ஸ்தானமும் கிடைத்தது. சட்டசபை மெம்பராக இருந்த காலத்தில் அவர்கள் நடப்பாக்கின (Hindu Religious Endowment Bill) இந்துமத தர்ம சொத்துபில்லைப்பற்றி சிலாகித்துப் பேசாதவர்கள் ஒருவருமே இல்லை. இதற்கு எதிர்கட்சியார் மிகப் பலமாக இருந்தாலும், நாகமய்யா அவர்களது ஊக்கமான உழைப்பினால் அந்த பில் சட்டமாக்கப்பட்டது. அதைப்பற்றி பென்ஷன் ஜட்ஜ் செல்லப்பா பிள்ளையவர்கள் எழுதிய ஒரு கடிதத்தில் "இங்கிலாந்தில் ராயர் கம்மிஷனர்கள் 240,000 பவன் செலவில் 36 வருஷ உழைப்பினால் சித்திபெற்ற காரியத்தை நாகமய்யா அவர்கள் ஒரு செலவுமில்லாமல் சொற்ப காலத்தில் தன் சொந்த முயற்சியால் மட்டும் சாதித்துவிட்டார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். இந்த

ஒரு கடிதத்தினால் மட்டும் அந்த பில்லின் அருமை பெருமைகள் இனிது விளங்கும்.

1902 டிசம்பரில் டெல்ஹி தர்பாருக்கு நமது மகாராஜா அவர்கள் சென்றபொழுது திவான்ஜியும் கூடப்போக நேர்ந்ததினால், நாகமய்யா அவர்கள் ஆக்ற்றிங் திவானாகி இரண்டுமாதம் ராஜ்யபாரம் நடத்தினார்கள். அப்பொழுது "சக்கரக்குழப்பம்" நிமித்தம் நாட்டில் பலவித சச்சரவுகள் உண்டாயிருந்தனவானாலும் அவர்களது சாமர்த்தியத்தினால் ராஜ்யபரணம் செவ்வையாகவே நடைபெற்றது. 15 மாதங்களுக்குப்பின் திவான் கிருஷ்ணசுவாமி ராயரவர்கள் திவான் உத்தியோகம் விட்டபொழுது, இரண்டாவதுமுறை நாகமய்யா அவர்கள் ஆக்ற்றிங் திவானானார். அப்பொழுது அவர்களுக்கே ஸ்திரமான திவான் உத்தியோகம் கிடைக்கக்கூடும் என்று யாவரும் வெகு ஆவலோடு ஆசித்தார்களானாலும் எவ்வாறோ V. P. மாதவராயரவர்கள் திவானாக வந்தார்கள்.

1904 டிசம்பர் மாதத்தில் "ஸ்டேட்மானுவல்" எழுதுவதற்காக ஸ்பெஷல் நியமனம் பெற, 1907-ல் அப்புத்தகம் வெளிவந்தது. அதைப்பற்றி ஸர். ஆர்தர் லாலி, ஸர். ஆர்தர் ஹாவலக், R. C. டட், ஸர். காபிரியல் ஸட்ரோக்ஸ், ஸர். G. S. போர்ப்ஸ், G. T. மெக்கன்ஸி, மைசூர் திவான் T. அனந்தராயர், ரெவரன்று J. கேலி, V. P. மாதவராயர், முதலியோரும் இந்தியா, இங்கிலாந்து முதலிய நாட்டிலுள்ள பிரபலப் பத்திரிகைகளும் ஒருப்போல் புகழ்ந்து கொண்டாடின.

இவ்வாறாக பேரும் புகழும்பெற்று, ஐந்துமுறை ஆக்ற்றிங் திவான் உத்தியோகமும் பார்த்து 1908 பெப்ருவரிமாதத்தில் பென்ஷன் பெற்றார்கள். அதுமுதல் அவர்கள் இறக்கும்வரையிலும் பொதுக்காரிய விஷயமாகவே உழைத்துக்கொண்டிருந்தார்கள். லார்ட் மார்லி சீர்திருத்தங்களைப் (Lord Morly's Reforms) பற்றி அவர்கள் எழுதிய குறிப்புகள் எல்லாம், அவர்களது ஆராய்ச்சிப் பெருக்கையும், ராஜ்யதந்திர ஞானத்தையும், புத்திநிட்சண்யத்தையும் நன்கு பிரத்தியட்சப்படுத்துகின்றன.

அவர்களைப்பற்றி பிரிட்டீஷ் துரைத்தனத்தார் கொண்டிருந்த நன்மதிப்பின் அறிகுறியாக 1911-வது வருஷத்தில் அவர்களுக்குத் திவான் பகதூர் பட்டம் அளிக்கப்பட்டது.

நாமகமய்யா அவர்கள் இவ்வாறு உலகமதிப்பும் பெறக்காரணம் என்ன? அவர்கள் ஐந்துமுறை ஆக்றிங் திவானாக இருந்ததா? மூன்று மகாராஜாக்கள் கீழிலும் 7 திவான்ஜிகள் கீழிலும் 42 வருஷகாலம் ஸர்க்கார் உத்தியோகம் நடத்தியதா? அவர்களது உயர்ச்சிக்கும் புகழுக்கும் காரணம் இவ்விரண்டுமல்ல. உண்மையில் அவர்களது உத்தியோகப் பொறுப்பு அவர்களது கீர்த்திக்கு ஒருதடையாக இருந்ததென்றே சொல்லலாம். பின்னர் அவர்களது உயர்ச்சிக்குத்தான் காரணம் என்ன? காரணம் அவர்களது மூளை வன்மையும் இணையற்ற உழைப்பும், ஞானத்தாகமுமேயாம்.

நம்மவர்கள் சாதாரணமாகக் கலாசாலையை விட்டு நீங்குவதோடு படிப்பையும் நிறுத்தி விடுகிறார்கள். பின்னர் அவர்ளது கவனமெல்லாம் பணந்தேடுவதும் உத்தியோகத்தில் மேலேறுவதும் மட்டுந்தான். கலாசாலையை விட்டுநீங்கும் நாள்முதற்றான் உண்மையான படிப்பு ஆரம்பமாகிறதென்ற உண்மையை உணருபவர்கள் நம்மவருள் மிகச் சொற்பமே. இதனாலேயே பெரிய கலாசாலைப் பட்டதாரிகளுக்கும், பள்ளிக்கூடம்விட்ட பின்னர், படிப்புப் பாஷாணமாகவும், புத்தகம் பூதமாகவும், பத்திரிகை பாம்பாகவும் தோன்றுகின்றன. 'மோட்டார் காரில்' அல்லாமல் சவாரிசெய்யார்கள்; P. R. அன்ற்சன்ஸன் கம்பனியாரிடமிருந்துதான் நகைகள் வருத்துவார்கள்; நடை உடைபாவனைகளில் ஐரோப்பியர்களையும் தோற்கடிப்பார்கள்; ஆனால் ஒரு புஸ்தகமோ பத்திரிகையோ வாங்கவேண்டுமானால் பணப்பையின் முடிச்சு இறுகிவிடும். "எனக்குவாசிக்க நேரமில்லை; அதிகமாக வாசித்தல் கண்ணுக்குக் கேடு என்று டாக்ற்றர் சொல்லியிருக்கிறார்" என்ற சாக்குப்போக்குகளும் தோன்ற ஆரம்பிக்கும். நமது இந்திய கலாசாலைப் பட்டதாரிகளில் 100-க்கு 90 பேரும் இந்தக் கொள்கையுடையவர்களாயிருக்கிறதினாலேயே, இந்துதேசத்தின் கதி மிக இழிவான நிலைமையிலிருக்கிறது. நாகமய்யா அவர்களைப்போன்ற உண்மையான படிப்பாளிகள் தொகை எந்நாள் வளருமோ அந்நாளே இந்துதேசம் தலையெடுத்துப் பூர்வப்பெருமை அடையும் நன்னாள். இந்தியாவுக்குத் தற்காலம் லபித்திருக்கும் சிறிது பெருமைக்குக் காரணராயுள்ளோர் கலாசாலைப் படிப்பாளிகளில் 100-க்கு 10 ஆக இருக்கும் நாகமய்யா அவர்களைப்போன்ற நல்லறிவாளர்களேயாம்.

அவர்களுக்குச் சொந்தமாக, பல விஷயங்களைப் பற்றிய 2500 அருமையான ஆங்கிலப் புத்தகங்கள் இருந்தன. திருவனந்தபுரம் "பப்ளிக் லைப்ரரி"யில் அவர்கள் ஒரு மெம்பராக இருந்தும், சொந்தமாக அநேக பத்திரிகைகளை வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். உத்தியோக சம்பந்தமான வேலைப்பெருக்கு எவ்வளவு அதிகமாக இருந்தாலும் ஒரு நாளில் ஒரு [illegible] வாசிக்காமல் தூங்கமாட்டார்கள். உண்மையில் அவர்கள் இறக்கும்வரையிலும் ஒரு மாணாக்கராகவே இருந்தார்கள். சொற்சுவை பொருட்சுவை பொருந்திய அவர்களது ஆங்கிலப் பேச்சுக்கும் நடைக்கும் காரணமாயிருந்தது மேலே கூறிய பயிற்சியே. ரெவனியூ இலாகாவில் இறங்காமல் வித்தியாப்பியாச டிப்பார்ட்டுமெண்டிலேயே இருந்திருந்தால், இதைவிடப் பெரிய நிலைமையை சாகித்திய உலகத்தில் (Literary world) அடைந்திருப்பார்கள் என்று, அவர்களது இருக்குப்பிறப்பான விஷயங்களைப் படித்தோரெல்லாம் ஒத்துக்கொள்வார்கள். ஸ்திரமாகத் திவான் உத்தியோகம் பெறாததினால் அவர்களது புகழ் சிறிது அபூர்ணமாக இருக்கவில்லையா என்று சிலர் சந்தேகிக்க இடமுண்டு. எனது அபிப்பிராயம் அதைவிடத் தப்பிதமான சந்தேகம் வேறில்லையென்பதே.

தஞ்சாவூர்ஜில்லா சபையின் ஆதரவின்கீழ் 1913 மார்ச்சுமாதத்தில் நடைபெற்ற ஸர். சேஷய்யா சாஸ்திரியவர்களின் 85-வது வருஷோற்சவ தினத்தன்று அக்கிராசனாதிபதியாக இருந்து அவர்கள் பேசிய பேச்சின் 'பெருமைக்கு நூறு திவான்களின் பெருமையை ஈடுவைத்தாலும் இணையாகாது.

திவான்ஜி உத்தியோகத்துக்கும் ஒருவிதப் பெருமையுண்டு. மன்னருக்கு எப்படித் தன்னாட்டில் மட்டுமே சிறப்புண்டோ அதுபோலவே திவான உத்தியோகத்துக்கும் தன்னாட்டில் மட்டுமே சிறப்புண்டு. நாகமய்யா அவர்களது பெருமையும் புகழும் அத்தன்மையனவல்ல. உலகத்தில் கல்விக்குமதிப்புக் குறையாதிருக்கும் வரை அவர்களது புகழுக்கும் ஒரு குறையுமில்லை. அவர்களது 'ஸ்டேட் மானுவல்' என்ற நூல் தற்காலத்திய சரித்திராசிரியர்களுக்கும், பிற்காலத்தவர்களுக்கும் ஒரு ஞானதீபமாகவே ஜொலித்துக்கொண்டிருக்கும். பல சந்தர்ப்பங்களில் பல இடங்களிலாக சேகரப்படுத்தப்பட்டிருக்கிற அவர்களது பேச்சுக்களும் நமது பின்னோர்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாகவும் ஞானாசிரியராகவும் திகழ்வுற்றுவிளங்கும். உண்மையில் ஒரு நாட்டையும் நாட்டாரையும் ஆள்பவன் அறிவாளியே அன்றி, அதிகாரியல்ல. ஷேக்ஸ்பியர் மஹா கவியைப் பற்றி கார்லைல் என்ற ஆங்கலப்பண்டிதர் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—"Consider, now, if they asked us, Will you give up your Indian Empire or your Shakspeare, you English…………should we not be forced to answer; Indian Empire or no Indian Empire, we cannot do without Shakspeare." ஆம்! இவை எவ்வளவு மெய்யான வார்த்தைகள். மகுடாதிபதிகளுக்கும் தம் அரசாட்சிக்குத் துணையாய் நிற்பது காயும் கனியும் உண்டு கந்தைத்துணியும் மரவுரியும் உடுத்து வாழ்ந்த மநுவின் தருமசாஸ்திரமே. ஔவை, திருவள்ளுவர் கம்பர் முதலியோர் காலத்திருந்த மன்னர் மன்னர்கள் எங்கே. எல்லாரும் "துஞ்சினர் என்றெடுத்துத் தூற்றப்பட்டார் அல்லால் எஞ்சினார் இவ்வுலகத்தில்" இலையே. முற்கூறிய புலவர் பெருமக்களோ அழியாப் புகழுடம்பு பெற்று இன்றும் வாழ்கின்றார்; என்றும் வாழவே வாழ்வார். அவர்களது பெருமைக்கு ஒரு எல்லையும் உளதோ?

அதுபோலவே நமது நாகமய்யா அவர்களது பெருமைக்கும் புகழுக்கும் எல்லையுமில்லை. ஆகவின் அவர்களின் பிறப்பினால் உயர்வடைந்த தென்னாடு, அவர்களது இறப்பை எண்ணி ஆறாநவது இயல்பேயாயினும் தெய்வத்திருவருளுக்குக் கீழ்ப்படிவதன்றோ நமது கடமை.

அவர்களது மரணத்தினால் அவர்கள் குடும்பத்தாருக்கு நேர்ந்திருக்கும் அடக்கொணாத் துன்பத்தில் நாமும் பங்குகொள்வதோடு, அவர்களது ஆத்மா நித்தியானந்த சுகம்பெற்று சாந்திபெறுமாறு திருவருளை வேண்டுகின்றோம்.

> "தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று."

சென்ற ஏப்ரில் 22-உ உலகம் முடியப்போவதாகச் சொல்லப்பட்டதுபோல் ஒன்றும் நிகழவில்லையாயினும், நம்மவர்களைத் துக்கசாகரத்தில் மூழ்குவிக்

கும் பல மரணங்களைப்பற்றிப் பிங்கள வருஷாரம்பத்தில் கேட்க நேர்ந்தது மிகவும் பரிதாபகரமானதே. பிரபல ஐக்கோர்ட்டு வக்கீலாயிருந்த செங்கோட்டை ராமய்யரவர்கள், மஹா மஹோபாத்தியாய சென்னை உ. வே. சுவாமிநாதய்யரவர்கள் மனைவி, இவ்விடம் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் K. ராமசந்திரராஜு B. A. முதலிய அநேகரின் மரணங்களைப் பற்றி ஒரே முறை கூற இடமானது பற்றி நாமடையும் துன்பம் அற்பசொற்பமல்ல.

ராமய்யரவர்களைப் பற்றிக் கேட்டிராதவர்கள் திருவிதாங்கூரில் மிகச் சொற்பமே. 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சையில் மட்டும் தேறினவர்களாயிருந்தாலும், தனது அதிநுட்பமான புத்தியினாலும், சாதுரியப் பேச்சினாலும் சிறந்த ஐக்கோர்ட்டு வக்கீலாக விளங்கினார்கள். அவர்களைப்போலவே திறமையுடையவராயிருந்த அவர்களது புத்திரன் ஈச்வரய்யரவர்களை சில மாதங்களுக்கு முன் இழக்க நேர்ந்ததே இவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் இறப்பதற்குக் காரணமாயிருக்கலாம். மஹா மஹோபாத்தியாய சுவாமிநாதய்யர் அவர்கள் மனைவியின் மரணமும் தமிழுலகத்துக்குப் பெரும் நஷ்டமென்றே சொல்லவேண்டும். தமிழுலகத்தாரின் நன்மைக்காகத் தன் வாழ்நாள் முழுதும் செலவுசெய்துவரும் மஹா மஹோபாத்தியாயரவர்களுக்குக் குடும்பக்கவலையைக் கொடுக்காது அப்பாரத்தைத் தானே பொறுத்து நடத்திவந்த அவ்வுத்தமியான வாழ்க்கைத் துணைவியை இழந்து வருந்தும் சாமிநாதய்யரவர்களோடு தமிழுலகமும் வருந்துகிறது. ராமச்சந்திரராஜு அவர்களுடைய மரணம் இவை எல்லாவற்றையும்விட மிகப் பரிதாபகரமானது. இறக்கும்பொழுது அவர்களுக்கு வயது 35. உத்தியோகத்திலிருந்த சொற்பகாலத்துக்குள் சத்தியசந்தன் என்று பெயரும் எடுத்தார்கள். நற்குணங்கள் பல நிறைந்த ஒரு உத்தமன், தமிழர்களின் நன்மைக்கான எவ்விஷயங்களுக்கும் தடையின்றி உதவிசெய்யும் அபிமானி. இவ்வளவு சிறுவயதில் இவ்வளவு நன்மதிப்பைப் பெறுவோர்கள் அபூர்வமே. "Whom the Gods love, die young." கடவுளால் நேசிக்கப்படுவோர் இளமையில் இறப்பார்கள் என்ற ஆங்கலப் பழமொழி உண்மையாய்விட்டது.

***

சென்னை "ஸ்திரீ அபேத ஐக்கியானந்த சமாஜத்தார்" மிக அருமையான வேலைகள் செய்து வருவதாயறிந்து சந்தோஷமடைகின்றோம். அவைகளாவன— (1) திக்கற்ற ஸ்திரீகளுக்கு ஒரு கைத்தொழிற்சாலை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். (2) வீடுவீடாய் உபாத்தியாயினிகளை அனுப்பிக் கல்வி கற்பிக்கிறார்கள். (3) இன்னும் உபாத்தியாயினிகள் தொகையைப் பெருக்குவதற்காக வாத்திச்சிகளைப் பழக்கிவருகிறார்கள். (4) வாரந்தோறும் சனிக்கிழமை மாலையில் ஸமாஜம் ஆபீஸில் பெண்களுக்காகப் பிரசங்கங்கள் நடத்தப்படுகின்றன. (5) ஸமாஜத்தாரின் உபயோகத்துக்காக ஒரு வாசிப்புச்சாலையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற சங்கங்கள் தென்னாட்டின் முக்கியபட்டினங்களில் எல்லாம் ஸ்தாபிக்கப்படுமானால் பெண்கல்வி அபிவிர்த்திக்கு மிக அனுகூலமாகவேயிருக்கும். இல்லறம் நடத்தும் பெண்கள் படிப்பில்லாதிருக்கும்வரை நமது நாகரீகமும் அபூர்ணமாயிருக்கும். சுதந்திரத்தைப் பெறுவதற்காக அழுதழுது நாட்போக்கும் நம்மவர் இந்த முக்கிய விஷயத்தில் கவனம் செலுத்துகிறார்களில்லை. ஊர்கள்தோறும் சங்கங்களுக்கும் வருஷோற்சவங்களுக்கும் ஒரு குறைவுமில்லையானாலும் வேண்டிய காரியங்கள் நடத்துவதற்கு மட்டுமே ஆட்களைக்காணோம். திருவனந்தை மாதா ஸமாஜத்தார் மேற்கூறிய விஷயங்களைக் கவனிப்பார்களானால் நமது சகோதரிகளின் நிலைமை மிக விருத்தியடையும்.

வாலராமபுரம் ஸ்ரீமான் P. S. மாணிக்கம் செட்டியாரவர்களுக்கு வடசேரி வணிகஸமாஜத்தார் சமர்ப்பித்த வந்தனோபசாரப் பத்திரிகையை இதனடியில் பிரசுரித்திருக்கிறோம். கோட்டாறு வைசிய குலாபிவிர்த்தி சங்கத்தாரும் இதுபோலவே செட்டியாரவர்களைக் கௌரவப்படுத்தியதாகவும் அறிகின்றோம். நமது நாட்டில் அபூர்வமாகக் காணப்படும் சமுதாய ஊழியக்காரர்களில் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் ஒருவர். அநேகமாய் சமுதாய ஊழியக்காரர்கள் எந்த சமுதாயத்துக்காக உழைத்துவருகிறார்களோ அந்த சமுதாயத்தாரால் அவமதிக்கப்படுவதே பெரும் வழக்கமாக இருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் தனது இனத்தாரின் நன்மதிப்பைப் பெறும் பாக்கியம் பெற்றிருப்பது சிலாகிக்கத்தக்கதே. நம்மவர்களின் குறைபாடுகளில் தக்க தலைவர்கள் இல்லாமையே மிக முக்கியமானது. எந்த சமுதாயம் நல்ல தலைவரைப் பெறுமோ. அந்த சமுதாயம் வெகு விரை

யில் முன்னேற்றமடையும். இதற்கு ஈழவ சமுதாயம் போதுமான திருஷ்டாந்தம். ஈழவ சமுதாயம் ஸ்ரீநாராயண குருசுவாமியைத் தலைவராகப் பெற்றிருப்பது போல, திருவிதாங்கோட்டு வணிகசமுதாயத்தாரும் ஸ்ரீமான் P. S. மாணிக்கம் செட்டியாரவர்களைத் தலைவராகப் பெற்றிருக்கின்றது. ஆகவே வணிகர்சமுதாயம் மிக விரையில் உயர்ச்சியடையுமென்று நம்பிக்கை கொள்ளலாம். திருவருளும் அவர்வழி நிற்க!

S. முத்துசுவாமிப் பிள்ளை.

ஒரு வந்தனோபசாரப் பத்திரிகை.

ஸ்ரீமான் P. S. மாணிக்கஞ்செட்டியார் அவர்கள்,

வாலராமபுரம்.

கல்விநலமும் கனிவும் கண்ணிய!

இமயமலர்தலை உலகிலுள்ள ஜீவகோடிகளுக்கு அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் கொடுத்து, புறங்கடை நல்லிசையும் நாட்டி, உறுங்கவலொன்றுற்றுழியும் கைகொடுத்துக் காப்பது கல்வியேயாம். ஆகையால் எல்லாச் செல்வத்திலும் சிறந்ததாய அக்கல்விச் செல்வத்தினை அடையாது அஞ்ஞானக் கடலில் விழுந்து தத்தளிக்கும் நமது மரபினரை மெஞ்ஞானக்கரைசேர்க்க ஒரு மாலுமிபோல் உழைத்துவரும் தங்களுக்கு எங்கள் நன்றியறிதலின் அறிகுறியாக இச்சிறு வந்தனோபசாரப் பத்திரிகையை மிக மகிழ்ச்சியோடு சமர்ப்பிக்கின்றோம்.

1. படிப்பில் விருப்பமில்லாது பாமரராய்க் காலந்தள்ளிவந்த நமது ஜாதியார் இப்பொழுது கல்வியில ஆசை பெருகி, கற்கத் தொடங்கியிருப்பதற்குக் காரணராயுள்ளவர்கள் தாங்களே!

2. நம்மரபினரை வியாபார விஷயமாய் விருத்தியடைவதற்குவேண்டிய உதவிகள் புரிந்து ஆதரிப்பதும் தாங்களே!

3. இந்த வணிகர் ஸமாஜ நூல்நிலையத்தை ஸ்தாபித்து, அதற்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக முதன்முதல் பொருளுதவிசெய்து அநேக தடவைகளில் அவைத் தலைமை வகித்து, இந்த ஸமாஜத்தின் முதல் வருஷோத்சவத்தில் எங்களுக்கு முதன்மையாகவிருந்து, எங்களை களிப்படுத்தியதும் தாங்களே.

4. தன்னயம் சிறிதுமின்றி பொதுஜன நன்மை ஒன்றையே தங்கள் ஜீவித நோக்கமாகக் கருதி, தாங்கள் உழைத்துவருவதனாலல்லவா அந்நிய தாஞாதாயாதிகளான பெருமை பொருந்திய நெய்யாற்றங்கரை ஜனங்கள், தங்களை நமது ஸ்ரீமூலம் பிரஜாஸபையின் பதின்மூன்றாவது கூட்டத்திற்குப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்து அனுப்பி, தங்களையும் நம்மரபினரையும் கௌரவப்படுத்தினார்கள்.

5. இந்த சமஸ்தானத்தில் பணத்தினாலும், பதவியினாலும் படிப்பினாலும் உயர்ந்தவர்களான கனவான்கள் நிறைந்திருந்த ஸ்ரீமூலம் பிரஜாசபையில் நமது திவான்ஜியாகிய திவான் பகதூர் M கிருஷ்ணன்நாயரவர்களுக்கு, தமிழர்களின் பிரதிநிதியாகத் தாங்கள் வந்தனோபசாரப் பத்திரிகை அளித்ததும் நம்மரபினருக்கு அளவில்லாத ஆனந்தம் அளிக்கின்றது.

6. பொதுக் கூட்டங்களில் இனிமையும் பெருமையும் வாய்ந்த பிரசங்கங்கள் செய்து பெயரெடுத்தவர் நம்மரபில் தாங்கள் ஒருவரே.

ஆகையால் நம்மரபினரின் நல்வாழ்வுக்காக எப்பொழுதும் பாடுபட்டு, புதிதுபுதிதான அபிவிருத்தி மார்க்கங்களை எடுத்துக்காட்டி, நமது மரபினரை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர உழைத்துவரும் தங்களுக்கு எல்லாமவல்ல எம்பெருமான் நீடித்த ஆயுளும், குறைவற்ற செல்வமும், நிறைவுற்ற சுகமும் அருளுமாறு நாங்கள் மனமொழி மெய்களால் வேண்டுகின்றோம்.

"செய்யாமற் செய்த உதவிக்கு, வையகமும்
வானகமும் ஆற்றலரிது."

வடசேரி,
92 சித்திரை 25-உ } இங்ஙனம்
வடசேரி வணிக ஸமாஜத்தார்.

THE PAST TIME.

The participles and the tense forms showing the Past time in Tamil, were in my opinion noun forms, and compounds of such forms respectively. Thus செய்து should originally have meant doing and செய்தான், "he who is with doing. செய்து the noun form, became the adverbial partciple and செய்த the form corresponding to the genitive case with அ in Canarese, became the adjectival participle.

In this connection I may point out the possibility of establishing that the past tense forms also were originally noun forms. A comparison of the words "might" "thought" and "drunkard" will enilighten any student of philology, on the snbject. Past tense forms like "willed" and "worked" as against "would, and wrought" are properly speaking *will-did and workdid* which again meant originally "will-doing" or "will-deed" and "work-doing or work-deed."

I may add that I have found it possible to trace all participial and tense-forms in all the Dravidian languages to this source, viz. the noun forms of verbs or the roots themselves used as nouns.

C. N. Anantaramaiya Sastri, M. A.

நீதிமொழிகள்.

1. அன்னதானம் சொர்ண தானங்களைவிட அறிவைத் தானம் செய்தல் தாழ்ந்ததன்று.

2. மன்மதனும் மாசுற்ற கண்ணாடியில் விரூபனாகவே தோன்றுவான்; அதுபோல நல்லாரும் தீயார் கண்ணுக்குத் தீயாராகவே தோன்றுவர்.

3. நமது துன்பங்களை நமக்கு நல்லறிவு புகட்டும் நல்லாசிரியர்கள். அன்றி பிரம்புக்கு அஞ்சுவோன் அறிவடைய மாட்டான்; துன்பத்துக்கஞ்சுவோன் சுகம் பெறவுமாட்டான்.

4. கூரையின் செம்மையை மழைக் காலத்தறியலாம்; நண்பர்களின் நட்பை துன்பகாலத்தறியலாம்.

5. வயித்தியன் நஞ்சையும் நன்மருந்தாக மாற்றுவான்; கடவுளும் தீமையிலிருந்து நன்மை விளைவிப்பார்.

6. சோம்பேறி இப்பிரபஞ்சத்தின் பெரும் பகைவன்; வறுமையும் நோயும் துரதிஷ்டமும் அவனால் வளர்ச்சியடைகின்றது. அறியாமைக்கும், குருட்டு நம்பிக்கைகளுக்கும், கோழைத்தனத்துக்கும் பிதாவாகவும், தனக்கும், மன்னுயிர்க்கும் கடவுளுக்கும் சுமையாகவும் இருக்கின்றார்.

7. எல்லாப் பருவத்தும் காய்க்கும் புளியமரத்தைப்போல் நீ எல்லாக்காலத்தும் உழைத்துக்கொண்டே இரு; அதன் பழத்தைப்போல் பற்றற்றவனாகவும் இருக்க மறக்காதே.

8. ஈசுவரன் நமது தேகத்திற்குள் மௌனமாக இருந்து நல்லவைகளையும், கெட்டவைகளையும் எப்பொழுதும் பார்க்கிறார்.

9. ஒரு வஸ்துவானது இயற்கையின் ஸ்வபாவத்தினாலேயே, பல உருவங்களாக மாறுகின்றதே அன்றி நாசமடைகிறதுமில்லை, நாஸ்தியாகப் போவதுமில்லை.

10. இருட்டறையில் ஒரு தீபத்தைவைத்தால் எப்படி இருட்டைப் போக்கடித்துப் பிரகாசத்தைக்கொடுக்கிறதோ, அதுபோல் அந்தகாரத்தில் கிடக்கிற ஜனங்களுக்குள் ஒரு ஞானவான் தோன்றினால் பிரகாசம் அடைவான்.

11. ஸம்ஸாரபந்தங்கள் மூன்று, முதன்முதல் வீடு; இரண்டாவது மனைவி; மூன்றாவது கால்நடைகள். இவை மூன்றையும் வைத்து அனுபவிக்கிறவன் ஸம்ஸாரி.

12. கடவுள் கிருபையைப் பெறுவது அரிது; எந்தக்காரியத்துக்கும் உழைப்பு அவசியம். உழைப்பை நிராகரிப்பவனுக்குத் தெய்வ கிருபை கிடைப்பது அரிது

சூரியமண்டலம்

ஸ்ரீமாந் T. V. நீலகண்டப் பிள்ளையவர்கள், B. A.

(All Rights Reserved)

நாம் வாசஞ் செய்கின்ற பூமியானது பந்து போல் உருண்டையான வடிவத்தை உடையது. நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து மைல் நடக்கிற மனிதனுக்குப் பூமியைச் சுற்றிவர ஏறக்குறைய மூன்று வருஷங்கள் வேண்டும். இவ்வளவு பெரிதான பூகோளத்தின் மேற்பரப்பின் ஐந்தில் நான்கு பாகம் கடல், மிகுந்த ஒன்று தரை. இந்தத் தரையிலேயே நாம் வாசம் செய்கிறோம்.

இப்பெரிய பூமியானது எவ்விடத்தும் தங்குதல் இல்லாமல் அந்தரத்து நிற்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிற்கும்பொழுதும் அது அசைவற்று இருக்கிறதில்லை. தான் நின்ற நிலையிலே பம்பரம் போல் சுற்றுவதோடு, அந்தப் பம்பரமானது எப்படி ஒரு கல்லை அல்லது வேறெந்தப் பொருளையாவது, சுற்றிவரலாமோ, அவ்விதமாகவே பூமியும் சூரியனைச் சுற்றிவருகிறது. இவ்விருவகைச் சலனங்களின் உண்மையைக் கிரகித்தல் முடியாத காரியமாகத் தோன்றினும் அந்தச் சந்தேகத்தை முற்றிலும் தவிர்த்துக் கொள்ளப் போதிய சான்றுகள் இருக்கின்றன.

பூமி சூரியனை ஒரு தடவை சுற்றுகிற நேரத்தில் தான் நின்ற நிலையிலே 365 தரம் சுற்றிக்கொள்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு தடவை தன்னை சுற்றிக்கொள்வதற்கு வேண்டிய நேரத்தை ஒரு "நாள்" என்கிறோம். சூரியனை ஒரு தடவை சுற்ற 365 நாட்கள் அல்லது ஒரு 'வருஷம்' வேண்டும்.

மேசை மேல் ஒரு விளக்கேற்றிவைத்து அதன் சமீபத்தில் ஒரு பந்தையும் வைத்தால் நாம் பார்க்கிறது என்ன? பந்தின் ஒருபாதி வெளிச்சமாகவும், மறுபாதி இருட்டாகவும் தோன்றுகிறது. அந்தப் பந்தை நாம் சுற்றும்படி செய்தால் வெளிச்சத்தில் இருந்த பாகம் இருட்டிலும், இருட்டில் இருந்தது வெளிச்சத்திலும் மாறி மாறி வருகிறது. இதுபோலவே சூரியனுக்கு எதிரில் சுழன்று நிற்கும் பூமியும் ஒரு பாகம் வெளிச்சமாகவும் மறுபாகம் இருட்டாகவும் மாறி மாறித் தோன்றுகிறது. இத்தோற்றத்திற்கே "பகல்" "இரவு" என்ற பெயர்கள் அமைந்திருக்கின்றன.

முதற் கூறிய சலனத்தின் பயன் அவ்வாறாக, இரண்டாவது சலனமாகிய "சூரியனைச்சுற்றல்"லின் பயன் யாது என்று கவனிப்போம். பூமியின் பாதை முற்றிலும் சரியான வட்டமாய் இராமல் சற்றே நீண்ட வட்ட (ellipse) வடிவமாயிருக்கிறது. ஆகையால் பூமியானது சிலகாலங்களில் சூரியனுக்குச் சமீபத்திலும் வேறு சில காலங்களில் சற்று தூரத்திலும் இருக்கின்றது. மேலும் பூமியின் அச்சு (axis) என்று சொல்லப்படுகின்றது செங்குத்தாய் நிற்காமல் சற்று ($23\frac{1}{2}^\circ$) சாய்ந்து நிற்கின்றது. இக்காரணங்களினால் (1) இரவு பகலின் நீட்சி வித்தியாசங்களும், (2) சூரியனிடம் இருந்து வருகின்ற வெப்பம் பூமியின் எல்லாப் பாகங்களிலும் எல்லாக்காலத்தும் ஒன்றுபோல் படாததினால் வசந்தம், வேனில், இலையுதிர்காலம், மாரிகாலம் என்ற பருவ வித்தியாசங்களும் ஏற்படுகின்றன.

பூமியைப்போல் சூரியனைச் சுற்றிவருகின்றவைகளுக்கு 'கிரகங்கள்' என்று பெயர். Planets என்ற ஆங்கிலவார்த்தை "பிரயாணிகள்" அல்லது "அலைந்து திரிகிறவர்கள்" என்று பொருள் படுதலால் அது இக்கிரகங்களுக்குக் காரணப்பெயராய் அமைந்தது. இத்தகைய கிரகங்களுள் முக்கியமானவை எட்டு. சூரியனும் இக்கிரகங்களும் ஒன்றாய்க் கவனிக்கப்படும்பொழுது அத்தொகுதியை "சூரியமண்டலம்" என்பர். சூரியமண்டலத்தின் நடுவில் இருப்பது சூரியன். சூரியனைக் கிரகங்கள் சுற்றிக்கொண்டேவருகின்றன. சூரியனுக்கு மிகவும் அணித்தாக இருக்கும் கிரகம் புதன்; ஆங்கிலத்தில் Mercury என்று அழைக்கப்படுகிறது. அதற்கடுத்தது சுக்கிரன் அல்லது 'வெள்ளி' (Venus). மூன்றாவதுதான நம்முடைய பூமி. நான்காவது செவ்வாய் (Mars). ஐந்தாவது வியாழன் (Jupiter). ஆறாவது சனி (Saturn). ஏழாவது யுரேனஸ் (Uranus). என்ற கிரகம். எட்டாவது நெப்டியூன் (Neptune).

இக்கிரகங்கள் எல்லாம் பூமியைப்போலவே இருவகைச் சலனங்களும் உடையன. பூமியைப்போலவே சற்று நீண்ட வட்டவடிவமான பாதையில் யாத்திரை செய்வதோடு அவற்றின் அச்சும் செங்குத்தாய் இராமல் சாய்ந்து நிற்கிறது. இவைகளின் பருமன், சூரியனுக்கும் இவற்றிற்கும் இருக்கின்ற சராசரி தூரம், இவைகளின் சலனங்கட்குத் தேவையான கால அளவு முதலிய விஷயங்களை அடியிற்காணும் அட்டவணையில் கண்டுகொள்க.

கிரகங்கள்.	கோளத்தின் குறுக்களவு.	சூரியனுக்கும் கிரகத்துக்கும் இருக்கின்ற தூரம்.	தன்னைச் சுற்றலுக்குக் கால அளவு	சூரியனைச் சுற்றலுக்குக் கால அளவு
புதன்	3,030 மைல்	36,000,000 மைல்	88 நாள்	88 நாள்
வெள்ளி	7,700 ,,	67,200,000 ,,	225 ,,	225 ,,
பூமி	7,918 ,,	92,900,000 ,,	23 மணி 56 நிமிஷம்	365 ,,
செவ்வாய்	4,200 ,,	141,500,000 ,,	24 ,, 38 ,,	687 ,,
வியாழன்	86,500 ,,	483,500,000 ,,	9 ,, 55 ,,	12 வருஷம்
சனி	71,000 ,,	886,500,000 ,,	10 ,, 14 ,,	29 ,,
யுரேனஸ்	31,900 ,,	1,782,000,000 ,,	....	84 ,,
நெப்டியூன்	32,900 ,,	2,792,000,000 ,,	....	165 ,,

சூரியன்: சூரியமண்டலத்துக்கு நடுவில் நிற்பது சூரியன். இது மிகப் பெரியதோர் கோளம். இதனுடைய குறுக்களவு 865,000 மைல். சூரியனை ஊடுருவிச்செல்வதற்கு ஒரு சுரங்கம் (tunnel) செய்து தண்டவாளங்கள் பதித்து ஒரு மணி நேரத்தில் 60 மைல் வேகமாய்ச் செல்லக்கூடிய "எக்ஸ்ப்ரஸ்" புகை வண்டி ஒரு பக்கம் இருந்து புறப்படுமானால் மறு பக்கம் வந்து சேருவதற்கு இரவும் பகலுமாக இருபது மாதங்கள் வேண்டிவரும். அப்படியானால் அதன் பருமன் எவ்வளவு! நம்முடைய பூமியே மிகப் பெரிதான ஒரு கோளம். ஆயினும் பூமியைப்போன்ற கோளங்கள் பத்து லக்ஷத்தை (1,000,000) ஒன்றாய்த் திரட்டினாலும் சூரியனுடைய பருமனுக்கு நிகராகாது. தராசின் ஒரு தட்டில் சூரியனையும் மறுதட்டில் மூன்று லக்ஷம்பூமிகளையும் வைத்தால் சூரியனுடைய நிறையே மிகுதியாகக் காணப்படும். சூரியனுக்கும் நமக்கும் இருக்கின்ற தூரம் ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல். இவ்வளவு பெரிய சூரியன் சிறியதாய்த் தோற்றப்படுவதற்குக் காரணம் இதுவே.

ஒன்பதுகோடியே முப்பதுலக்ஷம் (93000,000) என்றால் நம் மனத்திற்கெட்டாததோர் தூரம். பெரிய தொகைகளின் பெருமையை உள்ளபடி அறிந்து கொள்ளல் சற்று அசாத்தியமான காரியம். ஒன்று இரண்டு மூன்று என்று விரைவாகவும இரவும் பகலும் இடைவிடாமலும் வேறு யாதொரு தொழிலும் செய்யாமலும் எண்ணுவோம ஆனால் பத்துலக்ஷம் எண்ணிமுடிய மூன்று நாளுக்கதிகம் வேண்டும். சூரியனது சேய்மையை மைலளவில் குறிக்கும் தொகையை (93000000) எண்ணிமுடிக்க இரவும் பகலுமாக ஒன்பது மாதங்கள் வேண்டும்! மேலும், வெளிச்சம் செல்கின்ற வேகம் (Velocity of light) ஒரு செகண்டுக்கு 186,000 மைல். சூரியனில் இருந்து வெளிச்சம் நம் பூமியை வந்துசேர 500 செக்கண்டு அல்லது 8 நிமிஷங்களும் 20 செக்கண்டும் வேண்டும்.

கிரகங்களுக்கிருப்பதாய்க் கூறப்பட்ட இருவகைச சலனங்களில் முதலாவதாய "தன்னைச் சுற்றல்" (rotation) சூரியனிடத்துக் காணப்படுகிறது. இப்படி ஒரு தடவை சுற்ற 25 நாள் செல்கிறது.

சூரியனிடம் இருந்து கரையற்ற வெப்பமும் வெளிச்சமும் எத்தனையோ கோடிவருஷங்களாக நாமும் மற்றைய கிரகங்களும் அனுபவித்துக் கொண்டு

ருக்கின்றோமென்றால், சூரியனுடைய தன்மையை எடுத்துக் கூறல் அவசியமாக இராது. நாம் கண்டிருக்கிற, அல்லது அனுபவித்தவர்கள் மிகவும் அசாத்தியமான காங்கை என்று கூறி நாம் கேட்டிருக்கிற, வெப்பம் சூரியனுடைய வெப்பத்துக்கு எள்ளளவேனும் ஈடாகாது. மனதில் ஊகித்தற்கும அருமையான உஷ்ணஸ்திதியையுடைய, மிகப் பிரமாண்டமான ஒரு கோளம் என்று சூரியனை வருணிப்பது மிகைபடக் கூறல் என்ற குற்றத்துக்குச் சற்றுமிடமாகாது. சூரியனது மேற்பரப்பில் தோன்றும் தீச்சுடர்கள் அநேக ஆயிரமைல் உயரம் அளாவி நிற்பதை தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகக் காணமுடியும். இச்சுடர்கள் 40,000 அல்லது 50,000 மைல் உயரம் காணப்படுவது மிகவும் சாதாரணம். சிற்சில வேளைகளில் மூன்றுலக்ஷத்து ஐம்பதினாயிரம் (350000) மைல் உயரமாகவும் தோன்றுகின்றது. ஒரு லக்ஷம் மைல் உயரம் எழும்புவது சற்றும் அசாதாரணமல்ல.

நாம இவ்வுலகத்து அனுபவிக்கின்ற வெப்பத்துக்கும வெளிச்சத்துக்கும் காரணமாயிருப்பது சூரியன். சூரியமண்டலத்தின் நடுநாயகம் என்று மட்டுமல்ல நம உயிரின் உற்பத்தியென்றும் நம்முடைய ஜீவியத்துக்கு ஆதாரமானது என்றும் அதனை நாம் கொண்டாடவேண்டும். கடலில் இருக்கின்ற தண்ணீரை ஆவியாக மாறும்படி செய்து பூமியைச் செழிப்புடையதாகச் செய்யவேண்டும் என்ற இனிய கருத்துடன் அந்நீராவியை மறுபடியும் மழையாக வருஷிக்கச் செய்கிறது அந்தச் சூரியனே. ஆகாயம சுத்தப்படுவதற்கும், நம் கப்பல் முதலிய கலங்கள் "திரைகடலோடியும் திரவியந் தேடு"ம்படிக்குப் பலவகைக் காற்றுக்களை எழுப்புவதும் சூரியனே; மாரிகாலத்துக்குளிரின் கொடுமை பொறுக்காது தீயை வளர்த்து அவ்வெப்பத்தை அநுபவித்து ஆனந்திக்கும் வேளையில நாம உண்மையில் ஏற்றுக்கொள்வது சூரியனுடைய வெப்பமேயல்லாது வேறல்ல. நிலக்கரியானது அநேக ஆயிரவருஷங்களுக்குமுன் இப்பூமியின் மேலில் பட்ட சூரியகிரணங்களை ஒழிய பிறிதல்ல; ஆகையால் புகைவண்டித் தொடரை அதி வேகமாய் இழுத்துச் செல்வதும் வேறு பல்வகை யந்திரங்களை இயக்குவதும் அந்தச் சூரியனே. உயிருள்ளவை உயிருடன் இருப்பதற்கும், மரம் செடிகள் தழைத்தோங்குவதற்கும், காரணம சர்வ வல்லமையுள்ள அச்சூரியனே. இயற்கையின் வனப்புப் பொருந்திய தோற்றத்திற்கும், நாம் அருந்திக்கொள்கின்ற ஆகாராதிகட்கும், அணிந்துகொள்ளும் ஆடையாபரணங்கட்கும், நாம் அனுபவிக்கின்ற வெளிச்சம் முதலிய எவ்வகை நன்மைக்கும் மாத்திரமல்ல, நம்முடைய உயிருக்கும் நாம் உயிரோடு பிழைத்திருத்தலுக்கும் ஆதாரமாயிருப்பது அந்தரத்தமர்ந்திருக்கும் அகிலகோடிகளிலெல்லாம் சிறந்த சூரியனே.

சந்திரன்: பகலுக்கதிபதி சூரியனாதல் போல, இரவிற்கரசியாயமைந்தது சந்திரன். வானத்தில் வாழ்கின்ற கிரகங்கள் நக்ஷத்திரங்கள் முதலியவற்றுள் நம் கண்ணுக்குப் பெரிதாய்த் தோற்றுவன சூரிய சந்திரர்களே. இவற்றுள் சூரியன் உண்மையாகவே பிரமாண்டமான பொருள் என்று அறிந்தோம். ஆயின் சந்திரன் எத்தகைமைத்து? சந்திரனும கோளவடிவமான பொருள்தான். அதன் குறுக்களவு ஈராயிரத்து நூற்று அறுபது (2160) மைல். சூரியனைவிட பத்துலக்ஷமடங்கு சிறிய நம் பூமியைவிட அறுபத்து நாலு மடங்கு சிறியது சந்திரன். அவ்வளவு சிறிய பொருள் அநேகமாகக் சூரியனைப் போலவே பெரியதாய் காணப்படுவதின் காரணம் அதன் மிகுந்த அண்மையே. நமக்கும் சந்திரனுக்கும் இருக்கின்ற தூரம் இரண்டுலக்ஷத்து நாற்பதினாயிரம் (240000) மைல்.

முன் கூறிய இருவகைச் சலனங்களும் சந்திரனிடத்தும் காணப்படுகிறது. தன்னை ஒருதரம் சுற்றிக்கொள்வதற்கு 27 நாள், 7 மணி, 43 நிமிஷம் செலவிடுகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கிரகங்களைப்போல் சூரியனைச் சுற்றாமல் இது பூமியையே சுற்றிக்கொண்டுவருகிறது. பூமியும் சந்திரனும் சேர்ந்து சூரியனைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியை ஒரு தடவை சுற்றுவதற்கும் தன்னைச் சுற்றலுக்குத் தேவையான நேரமே (27 நாள 7 மணி 43 நிமிஷம்) செல்கிறதாம். இவ்விரண்டு கால அளவும் ஒன்றாகவே ஒரு விசேஷபலன் உண்டாகிறது. அதாவது, பூமியில இருக்கின்ற நமக்கு சந்திரனது ஒரேபாதியைத்தான் காட்டுகிறது மறுபக்கத்தைக் காட்டுகிறதேயில்லை. சந்திரனுடைய தோற்றத்தில் வித்தியாசமில்லாதிருப்பதின் காரணம் இதுவே.

சூரியன் பகற் காலத்து வெளிச்சம் கொடுப்பது போல், இராக்காலத்துச் சந்திரன் வெளிச்சம் கொடுக்கிறது. வெண்மையும் குளிர்ச்சியும் பொருந்திய சந்திரகிரணங்கள் இரவை எவ்வளவு வனப்புடையதா

கச் செய்கின்றன! பூரணச் சந்திரன் பிரகாசிக்கின்ற வேளையில் மனிதர் தம் கவலையையும் மறக்கின்றனர்; சிறுவர் சிறுமிகள் மிக உல்லாசமாய் விளையாடுகின்றனர்.! இம்மாயா சக்தியை உணர்ந்து அதன் புகழைப் பாடாதொழிந்த கவிவாணர்களும் இல்லை. கடல் மட்டுமல்ல சில உலகமே "தண்ணென் கதிர் வரவால் பொங்கும்" இயல்புடையது எனபதற்குச் சற்றும் ஐயமின்று.

இவ்வளவு வனப்புப் பொருந்திய சந்திரனது தோற்றம் எந்நாளும் ஒன்றுபோல் இராமல் மாற்றமடைவதின் காரணம் என்ன? சூரியன் அவ்வித மாற்றமடைகிறதில்லையே; விண்ணில் தோன்றிடும மீன் இனங்களும் ஒரே தோற்றமுடையனவே; சந்திரன் மட்டும் ஏன் தோற்ற வித்தியாசத்துக்கிடங் கொடுக்கிறது?

சூரியனைப்போல் சொந்த வெளிச்சமுடையதானால் சந்திரனும் எவ்விரவிலும் ஒரே தோற்றமுடையதாக இருக்கவேண்டும். உண்மையில் சந்திரன் பிரகாசமுள்ள பொருள் அல்ல, "காந்திமதி" என்பது உற்று நோக்கின் உண்மையை உணர்த்தாத பதம் எனத்தெரியும். வெயிலிலே ஒரு கண்ணாடியை வைத்தோமானால் எப்படி அது சூரிய வெளிச்சத்தை இருண்ட ஓர் அறைக்குள் செல்லும்படி செய்கிறதோ அப்படியே சூரியகாந்தி தன்மேல் படுவதினால் சந்திரன் பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுத்து, பிரகாசமுள்ளது போல் தோன்றுகிறது. நாம் பூமியில் இருந்தபடியே அதைப் பார்க்கிறதினாலும சூரியகாந்தி எல்லாப்பொழுதும் அதன் மேல் ஒரே அளவாகப்படுகிறதில்லை யாதலாலும், 'வளர் பிறை' 'தேய் பிறை' என்ற தோற்றங்கள் ஏற்படுகின்றன. சில வேளைகளிலே சூரியனுதயம் ஆகும்போது சந்திரனும் அதற்கு சமீபத்தில் மேகங்களும் காண நேரிட்டால், கவனித்துப் பார்க்கும்பொழுது அம் மேகங்களும் மதியும் ஒரே அளவு வெண்மையுடையனவாகத் தோன்றும. மேகங்களுக்கு இயற்கையாக வெளிச்சம் இல்லாதது போல் மதிக்கும் சுயமாகக் காந்தி இல்லை என்று தெரிந்து கொள்ளலாம். மேலும் சூரியகாந்தியானது சந்திரன் மேற் படாமல் மறைத்து வைத்ததற்கு ஏற்ற உபாயமிருக்குமானால், சந்திரன் நம் கண்ணுக்குத் தோன்றாமலே மறைந்து போகும்படி செய்ய முடியும் என்பதற்குத் தடையில்லை.

சந்திர பிம்பத்தில் தோன்றும் களங்கத்தைப் பற்றி எத்தனையோ கட்டுக்கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இக்கதைகள் எதுவும் உண்மையல்ல எனபது எடுத்துக் கூறவேண்டிய ஒரு விஷயமன்று. ஆயின் இக்களங்கத்தின தன்மைதான் என்ன?

தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியால் சந்திர பிம்பத்தை உற்று நோக்குங்கால் சந்திரனானது எப்பொழுதும் தோனறுவதுபோல ஒழுங்காகக் காணப்படாமல், காடுமுரடு, குன்று பள்ளம், இவைகள் ஏராளமுள்ளதாய்த் தோனறுகிறது. அவ்விடத்து மிகப் பெரிய மலைகளும பள்ளங்களும் இருக்கிறதாக எண்ணப்படுகிறது. ஆங்குள்ள மலைகள் பூமியில காணப்படும மலைகளைவிட உயரமானது என்றும, பள்ளங்கள் (Craters) 40, 50 மைல் குறுக்களவு உள்ளன என்றும் தெரியவருகின்றன. இப்பள்ளங்களுள் ஒன்று 78 மைல் குறுக்களவுடையதாம!

சந்திரகோளத்துக் காணப்படும் மலைகள் பள்ளங்கள் முதலிய யாவும் எப்பொழுதும் ஒரே தோற்றமுடையன; யாதொரு மாற்றமும் அடைகிறதில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடிவழியாகத் தெரிகின்ற தோற்றம் எப்பொழுதும் மிகத் தெளிவாயிருப்பதனாலும், மேடு பள்ளங்கள் மிகப் பிரத்தியக்ஷமாக (Strougly contrasted)த் தோன்றுகிறதினாலும், பூமியில் காணப்படும் இரண்டு முக்கிய பொருள்கள் அவ்விடத்தில் இல்லை என்று துணியவேண்டுவதாய் இருக்கிறது. அதாவது ஆகாயம், தண்ணீர் என்ற இரண்டும், சந்திரகோளத்தில் இவைகள் இல்லையென்று துணியவே, தாவர வர்க்கங்களும வேறு உயிர்வாழ்வனவும் ஆங்கு உண்டோ என்ற கேள்விக்கு இடமேயில்லை.

பூமியாகிய கிரகத்துக்குச் சந்திரன் உபக்கிரகமாய் (Satellite) ஏற்பட்டிருக்கிறதுபோல், மற்றைய கிரகங்களுக்கும் உபக்கிரகங்கள் இருக்கின்றன.

பூமிக்கு	உபக்கிரகம்	ஒன்று
செவ்வாய்க்கு	,,	இரண்டு
வியாழனுக்கு	,,	நான்கு
சனிக்கிரகத்துக்கு	,,	எட்டு
யுரேனஸ் ,,	,,	நான்கு
நெப்டியூன் ,,	,,	ஒன்று.

இந்த உபக்கிரகங்கள் அவ்வக்கிரகங்களைச் சுற்றிவருகின்றன. அந்தக் கிரகங்களும் உபக்கிரகங்களுமாக சூரியனைச் சுற்றிவருகின்றன.

ஆகர்ஷண விதி: சூரியனும் அதனைச் சேர்ந்த கிரகங்களும் உபக்கிரகங்களும் எவ்விடத்தும் தங்காமல் அந்தரத்திலே நின்று தமக்கு என்றமைந்த பாதையில் இருந்து எள்ளளவேனும் பிசகாது ஆடி வருகின்றதைக் கவனிக்கையில் இதைவிட ஆச்சரியமான விஷயம் வேறு உண்டு எனத் தெரியவில்லை. இப்படிச் சூரியமண்டலமும் மற்றகில கோடிகளும் அந்தரத்துத்தாழாமல் நிலைநிற்கின்றதின் காரணத்தை அறிந்து கொள்வது எப்படி?

பதினேழாவது நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் நியூடன (Newton) என்ற ஒரு பெரிய பண்டிதர் இருந்தார். மிகவும் புதுமையானதும் மனிதர் அறிவிற்கு அதுகாறும் தட்டுப்படாததும் ஆன ஒரு அருமையான விஷயத்தை இவர் 1687-வது வருஷத்தில் வெளியிட்டார். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கின்ற வஸ்துக்கள் ஒவ்வொன்றும் பிறவஸ்துக்களொவ்வொன்றையும் தன்னோடு இழுத்துக்கொள்கிறது; அப்படிக்கமைந்த ஆகர்ஷணசக்தி (The force of gravitation) தத்தம் பெருமை (mass) க்கும் சேய்மை (distance) க்கும் ஏற்றபடி இருக்கின்றது என்பது. இந்த ஆகர்ஷணவிதி (Law of gravitation) யானது நன்றாய்ப் பரீட்சிக்கப்பட்டு முற்றிலும் உண்மையானது என்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய ஆகர்ஷணவிதியைச் சூரியமண்டலத்துக்கமைத்துப் பார்க்குமளவில் சூரியனும் மற்று கிரக உபக்கிரகங்களும் தத்தம் நிலையில் நிற்பதன் காரணம் தெளிவாகத் தோன்றும். அந்த விதி (Law) யானது பிரபஞ்சத்துக்கே பொருந்துமாதலினால் சூரியமண்டலம் மட்டுமன்றி சகலவித அகிலகோடிகளும் தாழாமல் நிற்றலின் காரணமும் விளங்கும்.

முன் கொடுத்திருக்கிற அட்டவணையில் காண்பித்திருக்கும் முதல் ஆறு கிரகங்களையும் தொன்று தொட்டே யாவரும் அறிந்து வந்தார்கள். ஏழாவதாகிய யுரேனஸ் (Uranus) ஹெர்ஷல் (Sir William Herschel) என்ற வானசாஸ்திரியால் 1781-வது வருஷம் மார்ச்சு மீ 13-உ பரிசோதனை செய்யப்பட்டு அவரால் அதுவும் ஒரு "கிரகம்" என்று முதல் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. அதுவரை அது ஒரு நக்ஷத்திரமாகக் கருதப்பட்டிருந்தது தப்பிதமென அவர் விளக்கிக்காட்டினார்.

சூரியனைச் சுற்றி ஏழு கிரகங்கள் இருக்கின்றதாய்த் தெரியவந்தபொழுது, நியூடன் ஸ்தாபித்த ஆகர்ஷணவிதியை இவைகட்கும் சூரியனுக்குமாக அமைத்துப் பார்க்குமளவில், இவைகளின் நிலை தவறுதல் இருப்பதற்கு அவ்விதிப்படி இன்னும் 8-வது கிரகம் ஒன்று வேண்டும் என்று தெரியவந்தது. கணித சாஸ்திரத்தின் உதவியாலே இவ்விஷயத்தை இங்கிலாந்தில் ஆடம்ஸ் (Adams) என்றவரும், பிரான்ஸ்தேசத்தில் லெ வெரியர் (Le Verrier) என்றவரும் தனித் தனியாக யூகித்தறிந்தார்கள். ஆகர்ஷண விதி உண்மையானால் எட்டாவது கிரகம் கட்டாயமாய் இருக்கவேண்டும் என்று துணிந்தார்கள். மேலும் அப்படி ஒன்று உண்மையிலே இருக்கிறதானால், ஆகாயத்தில் அப்பொழுது இன்னதிசையில் இவ்வளவு உயரத்தில் இருக்கவேண்டும் என்றும் கணக்கிட்டார்கள். இதை வானசாஸ்திரிகளுக்குச் சொல்லவே, அவர்கள் மிக வல்லமையுடைய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை அந்தத் திசைக்குத் திருப்பின உடன் எண்ணியபடி குறித்த இடத்திலே நெப்டியூன் (Neptune) என்று இப்பொழுது அழைக்கப்படுகிற கிரகம் தென்பட்டது. இது எவ்வளவு அதிசயமான காரியம்! பல வருஷங்களுக்கு முன் நியூடன் பிரபுவால் அறிவிக்கப்பட்ட ஆகர்ஷண விதியின் தவறாத உண்மைக்கு இதைவிடத் தெளிவான சான்றும் வேண்டுமோ?

சூரியனைச் சுற்றிவருகின்றவைகளாக கிரகங்கள் உபக்கிரகங்கள் மட்டுமன்றி, இன்னும் வேறுபொருள்களும் இருக்கின்றன. கிரகங்களும் உபக்கிரகங்களும் சூரியனோடு ஒரே பரப்பில் (plane) அமர்ந்திருக்கின்றன. பெரியதோர் ஏரியில் சூரியனையும் கிரக உபக்கிரகங்களையும் குறிக்க பந்துகளை மிதக்கவிட்டால் அவைகள் தண்ணீரில் மிதப்பது "ஒரே பரப்பு" (Same plane) என்றதை விளங்கச் செய்யும். சூரியனைச் சுற்றிவருகின்றவை என்று இப்பொழுது சொல்லப்படும் அகிலங்களுக்கும் "தூமகேது" அல்லது "வால் நக்ஷத்திரம்" (Comets) என்று பெயர். இவைகள் சூரியமண்டலத்தின் பரப்பிற்குமாறாகப் பலதிசைகளிலிருந்தும் வந்து சூரியனைச் சுற்றுகின்றன. இவைகளின் பாதை மிகவும் நீண்ட வட்டவடிவமானது. சில தூமகேதுக்கள் திரும்பத் திரும்பத் தோன்றுகின்றன; சில ஒருதரம் தோன்றின பிறகு திரும்பாது அப்படியே காணாமற் போய் விடுகின்றன.

1911-வது வருஷம் தோன்றிய வால் நக்ஷத்திரம் மூந்திய வகையைச் சேர்ந்தது. இது 75 வருஷங்களுக்கு ஒரு தடவை தோன்றுவதாக ஹாலீ (Halley) என்ற ஆங்கில வானசாஸ்திரியால் கணக்கிடப்பட்டது. இவர் 1742-ம் வருஷத்திலிறந்தார். இறப்பதற்குச் சில வருஷங்களுக்கு முன்னேயே அந்தத் தூமகேது மறுபடியும் 1761-வது வருஷம் தோன்றும் என்று கணித்து சகோதர வானசாஸ்திரிகளை அவ்வுண்மையைப் பரீட்சிக்கும்படி வேண்டிக்கொண்டார். அப்படியே 1761-ம் வருஷம் அது தோன்றிற்று மறுபடியும் 1836-ம் வருஷத்திலும் பிறகு 1911-ம வருஷத்திலும் தோன்றியது. இன்னும் 1986-ம வருஷம் தோன்றும்.

கிரகங்களுக்கும் தூமகேதுக்களுக்கும் சில தெளிவான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. முதலாவது, கிரகங்கள் போகும பாதை அநேகமாகப்பூரண வட்டவடிவமானது; தூமகேது போகின்ற பாதை மிகவும் சுருங்கிநீண்ட வட்டவடிவமானது (narrow ellipse). கிரகங்கள் சூரியமண்டலப் பரப்பிலே அமர்ந்திருக்கின்றன; தூமகேதுக்கள் அப்பரப்புக்கு மாறாக வருகின்றன. மூன்றாவதாகக் கிரகங்களின் வடிவம் உருண்டை. தூமகேதுக்கள் உருண்டையான "தலை" யையும் அநேக ஆயிரம் மைல்களளவு நீண்ட "வாலை" யும் உடையன. கடைசியாக, கிரகங்களுக்குச் சொந்தமான வெளிச்சம் இல்லை. தூமகேதுக்கள் சுயகாந்தியால் பிரகாசிக்கின்றன.

தூமகேதுக்களின் வருகை பொதுவாக அச்சத்துடன் எதிர்பார்க்கப் படுகிறது.

> "தூமகேது புவிக்கெனத் தோன்றிய
> வாமமேகலை மங்கையரால் வரும்
> காமமில்லையெனில் கடுங்கேடெனும்
> நாமமில்லை, நரகமும் இல்லையே."

எனக் கம்பநாடர் கூறியதும் இங்கு கவனிக்கத் தக்கது.

தூமகேது துன்பத்தைக் குறிக்கிறது என்று அறிவின்மையால் சிலர் எண்ணுகிறார்கள். இவைகள் தோன்றினால் அரசர்க்கும் மற்றவர்கட்கும் எல்லையில்லாத துன்பம் நேரிடும் என்று நம் முன்னோர்களைப்போலவே, இக்காலத்தும் அநேகர் எண்ணிக்கொள்கிறார்கள். இதைவிடத் தப்பிதமான கொள்கைவேறில்லை. உலகத்தார்க்குத் துன்பமிழைக்கவேண்டும், அவர்களை அடியோடு அழித்து விடவேண்டும் என்ற தீக்கருத்து தூமகேதுக்களுக்குத் தோன்றுவதில்லை. ஒருக்கால் தோன்றினும் அப்படிச்செய்யுந்திறமை அவைகளுக்கு இல்லை. ஆகவே அவற்றின் வருகையை எண்ணி அச்சமடையாது மனத்திடத்துடனும் சந்தோஷத்துடனும் இருந்துகொண்டு, கடவுளால் நமக்கு அருளிச் செய்யப்பட்ட ஒரு விசேஷமான இனிய காட்சி என்றுமட்டுமே அதனைக் கருதுவது நேரான காரியம்.

இத்தகைய பெருமை நிறைந்தது சூரிய மண்டலம். இப்பெரிய மண்டலத்தின் ஒரு சிறு மூலையில் பூமியாகிய ஒரு இருப்பிடம் நமக்கு என்று அமைக்கப் பட்டிருக்கிறது. சூரியமண்டலத்தின் அமைப்பைக் கவனிக்கையில் அதனை சிருஷ்டித்த கடவுளின் சர்வ வல்லமையும் அவர்தம் தீர்க்க யோசனையும் நன்றாக விளங்கும். இவ்வளவு விசேஷமாகிய பிரபஞ்சத்தை சிருஷ்டித்ததோடு, மனிதர்களாகிய நமக்கு அந்த சிருஷ்டியின் உண்மையான மகிமையை உய்த்துணரிய வல்லமையுடைய அறிவினையுமளித்ததற்காக அக்கருணைக் கடலாகிய கடவுளை மிகுந்த வணக்கத்துடனும் கரையற்ற அன்புடனும் வாழ்த்துவது நம் கடமையாகும்.

> "வானந்த மண்ணினந்தம் வைத்து வைத்துப்
> பார்க்கவெனக்
> கானந்தந்தந்த வரசே பராபரமே"

T. V. நீலகண்டப்பிள்ளை.

திருத்தம்.

48-வது பக்கம் இரண்டாவது பத்திமுடிவில்,

வியாழனுக்கு உபக்கிரகம்	ஆறு
சனிக்கு ,,	ஒன்பது

என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

வான சஞ்சாரம்.

ஸ்ரீமதி T. பொன்னம்மாள்.

இந்தியர்களைப்போல் புராதனப்பற்று உடையவர்கள் ஒருவருமேயில்லை. உயிரை வேண்டுமானாலும் இழப்பார்கள், பொருளை வேண்டினும் இழப்பார்கள்.

மற்று எந்த அருமையான பொருள்களையும் இழக்கத் துணிவார்கள். ஆனால் மாமூல் வழக்கங்களை மட்டும் கைநழுவ விடமாட்டார்கள். இமமட்டோ! இந்தப் புராதனப் பற்றினால் நமது பூர்வீகர்கள் அறிந்திராத அநேக விஷயங்களுங்கூட அவர்கள் அறிந்திருந்ததாகச் சாதிக்கிறார்கள்.

இப்பொழுது நடைபெறும் யுத்தத்தில ஆகாய விமானங்கள் செய்துவரும் அதிசயமான கொடிய செயல்களைப் பத்திரிகைகளில் வாசித்தவுடன் "ஓகோ இது என்ன புதுமையா? நமது முன்னோர்கள் ஆகாய விமானஙகளில் சஞ்சரிக்கவில்லையா?" என்று நம்மவர்கள் கூறி இறுமாந்ததை அநேகர் கேட்டிருக்கலாம. "இராவணன் சீதாதேவியைத் தனது புஷ்பகவிமானத்தில் சிறை எடுத்துச சென்றான். ஸ்ரீராமர் இராவணஸம்ஹாரம் கழிந்தவுடன் சீதாசமேதராய் அவனது புஷ்பகவிமானத்தில் அயோத்திக்குத் திரும்பிச் சென்றார். பாரத யுத்த காலத்தில் தேவர்களும் கந்தர்வர்களும் ஆகாயவிமானங்களில் வந்து புஷ்பமாரி பெய்தார்கள். இன்னும் இதுபோன்ற திருஷ்டாந்தங்கள் எத்தனை வேண்டுமானாலும் சொல்லலாம்" என்று நம்மவர் பெருமையோடு கூறுகிறார்கள்.

வேறு சிலர் விக்ரமாதித்த மகாராஜனுடைய சிம்மாசனத்தில் அமைக்கப் பட்டிருந்த பதுமைகளும் தற்காலத்திய "போனக்கிராபு" களும் ஒன்றே என்று சாதிக்கிறார்கள்.

இன்னும் சிலர் கூறுவது இவைகள் எல்லாவற்றையும் விட மிக விநோதமாக இருக்கிறது. தேரையருடைய மாணுக்கரான கருவூராரோ அல்லது போகரோ தனது குருவினிடம் பிணக்கம் கொண்டு ஐரோப்பாவுக்குச் சென்று ஒரு ஐரோப்பிய மாதை மணஞ்செய்து, அநேக புத்திரர்களைப் பெற்றாராம். அவர்களுக்குத் தான் அறிந்திருந்த அநேக கருவித்தைகளைக் கற்றுக் கொடுத்தாராம். ஆகையினாலேயே ஐரோப்பியர்கள் ஸாஸ்திரங்களில் (Sciences) தேர்ச்சியடைந்திருக்கிறார்களாம்.

மேலே கூறியவைகளெல்லாம் ஒருக்கால் மெய்யாகவும் இருக்கலாம. அவைகளின் உண்மை இன்மைகளை ஆராய்வது இவ்விஷயத்தின் நோக்கமும் அன்று; உண்மையில் எனக்கு அதற்கு சக்தியும இல்லை. ஆகையால் பண்டைக்காலக் கதைகளைத் தள்ளிவிட்டுத் தற்கால நிலைமையைப்பற்றி மட்டும் ஆலோசிப்போம்.

இருபதாம் நூற்றாண்டுப் புதுமைகளில் ஆகாய விமானமும் முக்கியமான ஒன்றும். தற்காலக் கொடிய யுத்தம் தொடங்கிய பின்னரே விமானங்களைப் பற்றி நாம் பரக்க அறியலானோம். விமானங்கள் மூலம் ஒவ்வொரு நாளும் நடந்தேறும் அதியச் செயல்கள் எண்ணிறந்தன. ஆகாயவழியாகவும் ஜலமார்க்கமாகவும் அநேக மயில் தூரம் விரைவாய்ப் போகக்கூடிய பலவித விமானங்களின் பிரவர்த்திதனைக் கேட்டால் மிக வியப்பாகவும் விநோதமாகவும் இருக்கும். இப்பொழுது இந்த விமானங்களை ஜனங்களுக்குத் துன்பம் விளைப்பதற்கு மட்டும் உபயோகித்துவருகிறார்கள் ஆனாலும், இக்கொடிய யுத்தத்துக்கு அப்பால், இவைகள் ஸாதாரண ஸஞ்சாரவாகனங்கள் ஆகி ஜனங்களுக்கு நன்மை விளைக்கக் கூடுமென்றும் ஆசிக்கலாம். ஆகையால் ஆகாயவிமானங்களின் உற்பத்தி, வளர்ச்சி, தற்காலநிலை முதலியவற்றைக் கூறத் தொடங்குகிறேன்.

நீரிலும் நிலத்திலும் சுகமாய் ஸஞ்சரிப்பதற்கு வசதியான வாகனங்களைக் கண்டறிந்த பிறகு ஆகாயஸஞ்சாரத்துக்கு உள்ள மார்க்கங்களை அறிய மனிதனுக்கு ஆசையுண்டாயின்று. ஆசைக்கு எப்படி அளவில்லையோ அதுபோலவே மனிதனுடைய அறிவுக்கும் அளவில்லை. பறவைகளுக்கு ஆகாயத்தில் பறக்கலாமானால் மனிதனுக்கும் ஏன் பறக்கக் கூடாது என்ற எண்ணம் மதியாளரான சிலருக்கு உண்டாயிற்று. ஆகையால் சில ஐரோப்பியர்கள் போலி இறகுகளைக் கட்டிக்கொண்டு பறக்க எத்தனித்தார்கள்; இங்கிலாந்து, இத்தாலியா, பிரான்ஸ் முதலிய தேசத்தவர்களில் சிலர் இம்மாதிரியானபோலிச் சிறகுகள் கட்டிப் பறந்து பார்த்தார்கள். ஆனால் அம்முயற்சி பயன்படவில்லை. மனிதனுடைய உடம்புப்பாரத்தைத் தாங்கக்கூடிய சக்தியை அப்போலி இறகுகளுக்குக் கொடுக்க முடியாதாயிற்று. இதனால் உண்டான ஆபத்துகள் அநந்தமானாலும் அவர்கள் முயற்சிகுன்றிப் பின்னடையவில்லை.

இவ்வாறு வெகுகாலமாய்த் தொடர்ந்து செய்யப்பட்டுவந்த முயற்சியானது பதினெட்டாவது நூற்றாண்டில் ஒருவாறு பயனடையத் தொடங்கிற்று. ஆவிகளைப் பைகளிலடைத்து ஆகாயத்தில் விடத்தொடங்கினார்கள். ஆகாயவிளக்குகளென்று சாதாரணமாய்ச் சொல்லப்படும் காகிதக்கூடுகள் இக்காலத்தில் உண்டானவைகளே. இக்கூடுகளைச் சிறிதுகூடப் பரிஷ்

காரப்படுத்தி இலைகளுக்கு அடியில் ஒரு தொட்டிலை அமைத்து, அத்தொட்டிலில் சில மிருகங்களை ஏற்றி ஆகாயத்தில் பறத்திப் பார்த்தார்கள். இங்ஙனம் பல பரீட்சைகள் நடத்திய பின்னர் அவர்களுக்குச் சிறிது நம்பிக்கை உண்டாயிற்று. உண்டாகவே மிருகங்களுக்குப் பதிலாக மனிதரே ஏறிப் பறக்கத்தொடங்கினார்கள். நிலத்தில் சஞ்சரிக்கும் இயல்புடைய மனிதன் எக்காரணத்தினால் ஆகாயத்தில் பறந்து சென்றாலும் அது வியப்பையும் வேடிக்கையையும் விளைப்பது சகஜந்தானே. காடுங் கரையும் பறந்தோடும் மன இயல்புடைய மனிதர்கள் அவ்வழியில் பின்னும் முயற்சி செய்துகொண்டே இருந்தார்கள். அம்முயற்சியினால் அநேகர் கண்களை இழந்தனர்; அநேகர் கால் கைகள் இழந்தனர்; அநேகர் உயிரையே இழந்தனர்; அநேகர் சென்ற இடம் தெரியாமலே மறைந்தனர். எனினும் வினைத்திட்பமுடைய ஐரோப்பியர் முயற்சி குன்றவில்லை.

பிறந்தவர் இறப்பது உண்மைதானே. எந்நாளாவது இறக்கும் மனிதன் முன் இறந்தால் என்ன? பின் இறந்தால் என்ன? வீணாகப் புலாலுடம்பைப் பேணி ஒருவனுக்கும் பயனில்லாது இறந்தொழிவதைப் பார்க்கிலும், லோகோபகாரத்தின் பொருட்டு உயிர் துறந்து புகழுடம்பை அடைவதன்றோ சிறந்தது. "தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று." என்னும் நாயனார்மொழி எவ்வளவு உண்மையானது. நித்திய வேதமாகிய திருக்குறள் நம்மிடமிருந்தும் அதனைக் கற்று, அதன்வழிநடக்க ஞானமும் உறுதியும் அற்று நம்மவர் இழிவடைந்து கீழ்நோக்கிச் செல்கின்றனர். உத்தமர்களான மேனாட்டார் எப்பொழுதும் உயர்வே உள்ளி, மேன்மை அடைகின்றார்கள். அந்நோரை நம்மவர்கள் பின்பற்றுவார்களா?

நாள் செல்லச் செல்ல மேலே கூறிய யந்திரம் பரிஷ்காரமடைந்துகொண்டே வந்தது. கட்டியானதும், ஆனால் பளுவில்லாததுமான ஒரு வகைத் துணியால் ஆவியடைத்த பையைப் பொதிந்து, தொட்டிலிலிருந்து அடைக்கவும் திறக்கவும் கூடிய ஒருமாதிரி வாயிலுமுண்டாக்கி முன் கூறிய காயிதக்கூட்டை காலக்கிரமத்தில் விருத்திசெய்தார்கள். நினைத்தபொழுது மேல் ஏறவும் கீழ் இறங்கவும் செய்வதற்காக மணற் பைகளையும் அதில் ஏற்றிக் கொண்டார்கள். புகைக்கூட்டை கீழ் இறக்க விரும்பினால் ஆவிப்பையோடு சேர்ந்திருக்கிற சிறு கதவைத் திறந்து ஆவியை வெளியே விடுவார்கள். மேலே போகவிரும்பினால் மணற்பைகளைத் தொட்டிலிலிருந்து கீழே தள்ளிவிடுவார்கள். இந்த உபாயத்தினால் வானசஞ்சாரம் சிறிது இலகுவடைந்ததாயினும் அதனால் உண்டாகக் கூடிய ஆபத்துகள் முழுதும் நீங்கவில்லை.

இக்கெடுவில் காற்றைவிடக் கனமற்ற ஜலவாயு (hydrogen) கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் வானத்தில் பறந்து செல்லும் முறை இலேசாயிற்று. ஆனாலும் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு காரியத்தைச் செய்யவோ ஒரு இடத்துக்குப் போகவோ சாத்தியப்படவில்லை. ஆகவே தம் மனம்போல் விமானத்தை ஆகாயமார்க்கமாகச் செலுத்துவதற்கு வழி என்னவென்று பின்னர் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அதுவும் வெகு விரைவில் அவர்களுக்குக் கைவல்யமாயிற்று. கனமில்லாததும், மிக சக்தியுடையதும், வாயுவின் கதிக்கு எதிராய்ப்போக வலிமையுள்ளதுமான ஒரு யந்திரத்தை உண்டுபண்ணி விமானத்தோடு சேர்த்தார்கள். மின்சாரம், 'பெற்றோல்' முதலியவற்றால் இந்த யந்திரத்தை ஓட்டினார்கள். அதோடும் விமானம் பூர்த்தியாகவில்லை. நம் மனப்படி விமானத்தை மேலே செலுத்தவும் கீழே தாழ்த்தவும் முடியாமலிருந்த குறைபாடு பின்னும் சில காலஞ் சென்றபின்னே நீங்கியது. இப்பொழுது வழக்கத்திலிருக்கும் விமானம் ஒரு பிரெஞ்சு சாஸ்திரியால் (scientist) கண்டுபிடிக்கப்பட்டது. அதில், நமது மனம்போல் உயர்த்தவும் தாழ்க்கவும் வசதியான யந்திரங்களையும் ஆகாயமார்க்கமாய் இஷ்டப்படி ஊர்ந்து செல்வதற்கு அமரம் அல்லது சுக்கானையும் அமைத்து, அமெரிக்கர் பரிஷ்கரப்படுத்தினர். அதுமுதற்றான் வான சஞ்சாரம் சாத்தியவிஷயமாயிற்று. இத்துடன் அவர்கள் திருப்தியடையவில்லை. பின்னும் பலநாள் அவர்கள் வேலை செய்து பறவையினும் விரைவாய்ப் பறக்கக் கூடிய பலமாதிரி விமானங்களைக் கண்டுபிடித்தார்கள். மிகக் கனமான பொருள்களை ஏற்றி ஊர்வதற்கான வேறு சில விமானங்களும் உண்டாக்கப்பட்டன. ஐரோப்பிய கவான்மென்றார் எல்லாம் ஆகாயவிமான நிர்மாணத்தில் மிகவும் கவலைசெலுத்தத் தலைப்பட்டனர். யுத்தகாலங்களில் ஆகாயமார்க்கமாய்ச் சென்று சத்துருக்களின் நிலையைக் கண்டறிவதற்கு இந்த ஆகாயவிமானம் பெரிதும் உபகாரமாகுமென்ற உண்மை யாவருக்கும் பிரத்தியட்சமாயிற்று. ஆகவே ஆகாயவிமானத்தையும் படைக்கலவகுப்பின் ஒரு பிரி

வாக்கினார்கள். தரைப்படை கப்பற்படைகளை அதிகப்படுத்தி, தன் நாட்டை அந்நிய நாடுகளைவிட வலிமையுடையதாக்க முயன்றதுபோலவே ஆகாயவிமானவகுப்பிலும் இதரநாடுகளைவிடத் தன் நாடே முன்னடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொரு துரைத்தனத்தாரும் போட்டிசெய்து உழைக்கத்தொடங்கினார்கள். இவ்விஷயத்தில் ஜர்மன் தேசத்தாரும் பிரஞ்சுதேசத்தாரும மட்டுமே ஐரோப்பாவில் முதன்மைபெற்றார்கள். அதுமுதல் யாவருடைய மனமும் ஆகாயவிமானவிஷயததில் திருமபிற்று. ஆகாயசஞ்சாரத்தில் தேர்ச்சியடைய வீரர்களான வாலிபர்கள் துணிந்து முன் வந்தார்கள. இதினால் சேர்ந்த ஆபததுகளோ அனந்தம். ஆயினும் தேசக்ஷேம விரும்பிகளான அவ்வுத்தமர்கள் பின்னடையவில்லை. பிரஞ்சு தேசத்தாரே இப்பொழுது பெயர்பெற்ற ஆகாயசஞ்சாரிகளாக இருக்கிறார்கள்.

ஆகாய விமானங்களிலெல்லாம ஜெர்மானியருடைய 'செப்லின்' விமானமே சிறந்ததென்று கருதப்பட்டு இருந்தது. ஆனால் 'செப்லின்' விமானத்துக்கு ஒப்பான ஒன்றை நமது நேசகட்சியில் இப்பொழுது சேர்ந்திருக்கிற அமெரிக்கர்களும் கண்டுபிடித்துவிட்டார்கள். இங்கிலாந்திலும் அதுபோன்ற விமானங்கள் உண்டாக்கப்பட்டுப் பரீட்சைகள் நடந்துவருவதாகப் பத்திரிகைகள் மூலம் அறிகிறோம். ஆகவே ஜெர்மானியருக்கு செப்லின் விஷயமாக இருந்த இறுமாப்பும் அடங்கிவிட்டது.

தருமபயமில்லாத அந்த அரக்கர்களுக்கு இனி உயர்வேது? புகழேது?

தருமபாலர்களான ஆங்கிலத் துரைத்தனத்தாரும் அவர்களது நேசகட்சியாரும், உலகத்தையெல்லாம் நிலைகுலையச் செய்யும் தற்காலக்கொடும்போரில் வெற்றியடையுமாறு தமிழ் உலகத்தார் எல்லாம் சர்வேசனை மனமொழி மெய்களால் வேண்டுவோமாக.

T Ponnammal.

ஆகாரமும் பானமும்.

ஸ்ரீமான். V. R. சுந்தரராஜ சர்மா அவர்கள்.

மானிடர்க்கு இன்றியமையாதவைகளில் ஆகாரமும் பானமும் மிகவும் முக்கியமானவை. இவைகளில்லாவிட்டால் மனிதன் உயிர் வாழமுடியாது; மனதும் சரியாய் வேலை செய்யாது; ஏனெனில சரியான தேக ஆரோக்கியம ஏற்படாது; சரீர சுகமுடையவர்களுக்கே புத்தி நுட்பம் உண்டாகும. பிணியாளிகளின் மனம் எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவர்களுடைய எண்ணங்களும கெட்ட வழிகளில் பிரவேசிக்கும்.

ஆகாரம் நமக்கு இன்றியமையாததாயிருந்தாலும் அதைப்பற்றி நன்றாய் ஆராயாமல் இருப்பது எவ்வளவு தீமையானது? அநேகர் தம முன்னோர் உண்டு வந்தது போலவே தாமும் உண்டு வருகின்றனரேயன்றி, எவ்வித ஆகாரம் ஆரோக்கியம் தரும, எவ்வளவு தின்றால் சரீரபுஷ்டி உண்டாகுமென்பதைப் பற்றிச்சிறிதும் ஆலோசனை செய்வதில்லை. ஆனால் சிறிதுகாலததிற்கு முன்பாகத்தான் மேல் நாட்டார் இவற்றைக்குறித்து ஆலோசனைசெய்து உணவுப்பொருளின் தனமைகளைப் பற்றி விரிவான நூல்கள் வெளியிட்டிருக்கிறார்கள். என்றாலும் படிததவர்கள் கூட, சிறிதேனும இவ்விஷயத்தை உற்று நோக்காமல் சரீரசுகத்திற்கு முற்றும் விரோதமான பல பொருள்களை உண்டும பருகியும வருகின்றனர்.

நாம உட்கொள்ளும் ஆகாரமானது நமக்கு இரண்டு விதத்தில் உதவுகின்றது. சாஸ்திர ஆராய்ச்சியின்படி நாம செய்யும் ஒவ்வொரு வேலையினாலும் நமது தேகததிலிருந்து கொஞ்சம சக்தி (energy) குறைந்துகொண்டே வருகின்றது. நாம நடக்கும் போதும், நிற்கும் போதும், சுவாஸம் விடும்போதும், உறங்கும போதும கூட இவ்விதமே குறைகின்றது. அப்படிபபட்ட குறைபாட்டை மறுபடியும் பூர்த்திசெய்வதற்கும், மேல்கொண்டு சரீரபுஷ்டியைக் கொடுப்பதற்கும் ஆகாரமும் பானமும் உதவுகின்றன.

அநேகர் அளவுக்கு அதிகமாகவே உண்கிறார்கள். அவர்கள் உண்பதற்காக உயிர் வாழ்கின்றனரேயன்றி, உயிர் வாழ்வதற்காக உண்பதில்லை. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" எனனும் சத்திய வாக்

கை நாம் மேற்கொள்ளல் வேண்டும். மீறுங்கொள்ளலால் ஜீரணக்கருவிகளுக்கு அதிகமான வேலையைக் கொடுக்கின்றோம். அவைகளில் முக்கியமான உறுப்புகளாகிய இரைப்பை (stomach) கல்லீரல், (liver) குண்டிக்காய் (kidneys) முதலியவைகள் அதிகவேலை தாங்கமுடியாமல் சீக்கிரம் கெட்டுவிடுகின்றன. அதனால் பசியின்மை, வயிறுப்பல், நீரழிவு, காமாலை, இழும்பு, வாதம் முதலிய பற்பல வியாதிகள் உண்டாகின்றன.

ஐரோப்பாவில் மாமிசத்தைவிடக் காயபலம் கொடுக்கக்கூடிய ஆகாரம் வேறொன்றுமில்லையென ஓர் கொள்கை இருந்தது. அதிலும் மாட்டிறைச்சியையே மேன்மையானதாகக் கொண்டிருந்தனர். ஆனால் ஜப்பானியர் அவர்களுக்கு நல்ல பாதையைக் காண்பித்துவிட்டனர். நமது சரீர அமைப்பிற்கு வேண்டிய நல்ல சாதனங்களனைத்தும் அரிசியில் அடங்கியிருப்பதாக அவர்கள் ரூபித்தார்கள். அரிசி சரியாய் சமைக்கப்படின் சீக்கிரத்தில் ஜீரணிக்கின்றது. அரிசியின் மகிமையை அறியாதிருந்தது ஐரோப்பியரின் குற்றமல்ல. மேனாட்டார் பார்வைக்கு மாத்திரம் அழகாயும், குளிர்ச்சியாயும், இருப்பதை விரும்புவதே அதற்குக் காரணம். அது நல்ல வெள்ளை நிறமாய் இருக்கும்பொருட்டு அதன் மேற்பாகத்தைக் களைந்துவிடுகின்றனர். அம்மேற்பாகத்தில் தான் நல்ல ஆகாரசாதனம் நிறைந்திருக்கின்றது. ஆனால் ஐரோப்பியர் அதன் மத்தியிலுள்ள சாரம் நீங்கிய சக்கையைத்தான் உபயோகித்து வந்தனர். ஆனால் ஜப்பானியர்களும் நமமவர்களும் மேற்பாகத்தைப் போக்காமல் சிறிது தண்ணீர் மாத்திரமே போருமாறு வேகவைத்து உண்டுவருகின்றனர். பருமனான அரிசி பொடி அரிசியை விடத் தேகத்திற்கு நல்லது.

மாமிச போஜனம் செய்வது இரைப்பை, கல்லீரல் குடல் முதலிய உறுப்புகளுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுப்பதாகும். ஆகையால் அவற்றைக் கூடியவரையில் குறைத்து அதற்குப் பதிலாய் சாகபக்ஷணம் செய்யவேண்டும். பால், காய், கறி, பழம் முதலியவைகளுடன் உண்பது தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் ஏற்றது. சாகபக்ஷணத்துடன் பாலும் முட்டையும் சேர்த்து உண்பதால் சரீரமும், மனதும் உயர்ந்த நிலை அடையும். இதற்குச் சரியான திருஷ்டாந்தம், சுத்த சாகபக்ஷணிகளாகிய பிராமணர்களே. அவர்களே மற்றவர்களைக் காட்டிலும் மிகுந்த புத்திகூர்மையுடையவர்கள். இந்தியாவிலும், வெளிநாட்டிலும் கூட மன ஆராய்ச்சியில் தேர்ந்தவர்களெனப் பெயர்பெற்றிருக்கின்றனர். வைத்தியம், தர்க்கம், கணிதம் முதலிய அநேகவித சாஸ்திரங்களில் அவர்களே முதிர்ந்த தேர்ச்சியடைந்திருக்கின்றனர்.

சாகபக்ஷணத்தை மிகவும் மேன்மையாகக் கொண்டாடவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனில், மனிதர்களின் வயிற்றை நிறைக்கும் பொருட்டு மானிடத்தன்மையை அறவே வொழித்துப் பல்லாயிரம் வாயற்ற சாதுவான பிராணிகளின் உயிர்களுக்கு இன்னல் விளைவித்தல் சிறிதேனும் நீதியாகுமா? இவ்விதம் இடர்விளைக்கும் ஐரோப்பாவில், லண்டன்மாநகரில்கூட ஜீவப்பிராணிகளிடம் சற்று இரக்கம் காட்டும் சபை (The league of the Golden Age) ஒன்றிருக்கிறது "அஹிம்ஸாபரமோதர்மம்" என்னும் நமது சமணர்களின் கொள்கையைத்தான் அது பின்பற்றியிருக்கின்றது. அதன் கிளைச்சங்கங்கள் உலகில் பலவிடங்களிலும் பரவியிருக்கின்றன. இதனால் மேனாட்டார் நம்மிடமிருந்து சில அரிய கொள்கைகளை மேற்கொண்டிருக்கிறார்களென வெளியாகின்றது. மேலும் மாமிசம் புசிக்கும் பக்ஷி மிருகங்களைவிடக் காய்கனிகளைத் தின்னும் பிராணிகள் அதிகநாள் ஜீவிக்கின்றனவென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். Prof. Metchnikoff என்பவர் மாமிசபோஜனம் செய்வதால் குடலில் வியாதிகள் ஏற்பட்டு மனிதனது வாழ்நாள் குறைகின்றது என்று சொல்லுகிறார். நம் நாட்டாருடைய பழமையான கொள்கைகள் மேல்நாட்டாரால் எவ்வளவு மேன்மையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றதென்பதற்கு இது ஒரு நல்ல திருஷ்டாந்தமாகும்.

இவற்றிலெல்லாம் மிகவும் கொடியது (Potted-meat) அன்னிய நாடுகளிலிருந்து பக்குவம் செய்யப்பட்டுவரும் மாமிசமே. அவைகளில் அதிகமானவைகளும், வயதாகி நோயுற்று உபயோகமற்ற குதிரைகளின் மாமிசமாம். அமெரிக்காவில் மாமிச பக்குவம் செய்பவரிடமிருந்து அதில் ஏற்படும் அசுத்தங்களும், குற்றங்களும் நன்கு விளங்குகின்றன. அவைகளை நினைத்தாலும் மனதிற்கு அச்சம் தரும். தவிர மேற்சொன்ன பொருள்கள் நெடுநாள்வரைக் கெடாமலிருப்பதற்கு (Boric acid) என்னும் ஒருவகை மருந்து சேர்க்கப்படுகின்றது. அதைச் சிறிது உட்கொள்ளின் கெடுதி விளையாதாயினும் அதுசேர்ந்த பலவகையான ஆகாரம் உட்கொள்ளுவதால் அது சிறிது சிறிதாகப்

பெருகுகின்றது. இப்படியே பல நாள் உட்கொள்வதால் உண்போரது தேகத்தில் எவ்வளவு சேருமெனக் கணக்கிட்டுக் கொள்ளலாம். தவிர மாமிசமானது சிறிதுகாலம் அப்படியே வைத்திருந்தால் யனிகளுல் தாங்கமுடியாத துர்நாற்றமுடையதாகும். அப்படிப்பட்ட நாற்றத்தை மருந்துகளால் மறைத்து உட்கொள்வதால் எவ்வளவு கெடுதி உண்டாகும்! மாமிசபோஜனம் மனோதைரியமுண்டாக்குமெனினும், அப்படிப்பட்ட தைரியம் மிருகத்தன்மை யுடையதாகவே யிருக்கும. ஆனால், காய் கறிகளை உண்பவர்களின் மனம் சாந்தமாகவும், ஆழ்ந்த யோசனையுடன் கூடிய புத்தி கூர்மையுடையதாகவும் விளங்கும்.

மேலும், மனிதரால பக்குவம் செய்யப்பட்டமேனாட்டு ஆகாரத்தில பலவித கெட்ட வஸ்துக்கள் சேர்க்கப்படுகின்றன.* உதாரணமாக மாவில Plaster of paris என்ற பொருளும், வெண்ணெயில் கொழுப்பும் செப்பில எண்ணெயும் இதுபோன்ற பல பொருள்களும் கலக்கப்படும. இவ்விதம செய்வதில் நம்நாட்டார், மேல் நாட்டாரைப்போல தேர்ச்சி பெறவில்லையாயினும் இவர்களும் தாழ்ந்தவர்களல்ல. பாலில் விஷக்கிருமிகள் நிறைந்த கெட்ட தண்ணீரைச்சேர்க்கின்றனர். இப்போப்பட்ட கெட்டவஸ்துக்களை உபயோகப்படுத்துவதால் மருந்து செய்வோர்களுக்கும், மருந்து வியாபாரிகளுக்கும் நல்ல வரும்படி கிடைக்கின்றது. வைத்தியர்களும் மருந்துக்கடைகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன.

சிலருக்கு மாமிசம் குடும்ப ஔஷதமாம. அதில்லாவிட்டால் அவர்களுக்குத்தேகசௌக்கியம் ஏற்படாதாம. அவ்வாறுள்ளவர்கள் உஷ்ணகாலத்தில் அவைகளைநீக்கி, தயிர் மோர் முதலியவைகளை அதிகமாய் உபயோகிக்கவேண்டும். அதைப்போல சரீரபுஷ்டி, குளிர்ச்சி, முதலிய குணம் செய்வது வேறொன்றுமில்லை. நம் நாட்டாருக்கு இதைப்பற்றி அதிகமாய் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. சாஸ்திர ஆராய்ச்சி செய்த நிபுணர்களும இதையே மேன்மையாகச் சொல்லுகிறார்கள்.

பழங்கள் தேகத்திற்கு நன்மைபயப்பனவென்று நான் சொல்லாமலே யாவருக்குக்கும் தெரியும். அவைகள் தேகத்திலுள்ள இரத்தத்தை நன்றாய்ச் சுத்தப்படுத்துகின்றன. அவைகளை வேகவைத்தால் அவைகளிலுள்ள பல உபயோகமானபொருள்கள் கெட்டுவிடுகின்றன. ஆகையால் அவைகளைச் சமையல் செய்யவேண்டியது அவசியமில்லை. நன்றாய்க்கனிந்த கனிகளில தேகபுஷ்டியைத்தரும் வஸ்துக்கள் சரியானபடி அமைந்திருக்கின்றன.

(தொடரும்)

வி. ஆர். சுந்தரராஜ சர்மா.

மாய மறைவு.

ஸ்ரீமாந் T. V. சங்கரக்குமாருப் பிள்ளையவர்கள்.

I.

மாலை மணி ஏழுக்கு மேலாயிற்று, குளிர்மதியும் தன் கிரணங்களை வீசியும் வீசாதும் வானத்தில் தோன்றினன். மந்தமாருதம் மெல்லென வீச, புஷ்பித்து நின்ற செடி கொடிகள் அழகாய்த் தலை சாய்த்தாடின. இவ் வேளையில் ஸ்ரீநிவாசன் தனது அறையின் பின்புறத்திலிருக்கும் தோட்டத்தின்கண் நண்பன் நடேசனோடு உல்லாசமாக உலாவிக்கொண்டு, இயற்கையாசியின் வனப்பைக் கண்ணுற்று ஆனந்தித்திருந்தான். ஆங்கோர் மூலையில அமைக்கப்பட்டிருந்த திட்டொன்றின்மேல் இனிதமர்ந்து பற்பல காரியங்களைப்பற்றி எண்ணினர்கள். திருவனந்த மகாராஜா கலாசாலையில் வாசிக்கும்போது அவர்களுக்கமைந்த நண்பர் பலரைப்பற்றிப் பேசினர்கள். அவர் தம்மோடு உறவாடுதலால் அமைந்த சந்தோஷ மெவ்வளவு! பெருமையும் நன்மையும் எவ்வளவு! நண்பர்களின் பிரிவாற்றுமையை எண்ணி மிக நொந்தார்கள். இவர்கள் இப்படி இருக்கையில் "பங்கஜம்! பங்கஜம்! எங்கு போனாய் ...ஐயோ! ......" என்று புலம்பித் துயரப்படும் பெண் குரலொன்று கேட்க, ஸ்ரீநிவாசனும் நடேசனும் மிகவிரைவாகத் தெருவாயிலுக்கு வந்தார்கள். இதற்குள் அழுதால் பலமாய்க் கேட்கத் தொடங்கிற்று. வீதியில் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடிவிட்டார்கள். "பங்கஜத்தைக் காணவில்லை" என்ற பேச்சே எல்லாருடைய வாய்களிலிருந்தும் விழுந்தது. அவளைக் காணமைக்குப் பலர் பலவிதமாகக் காரணம் கூறினர்கள்.

ஸ்ரீநிவாசனும் அவனது நண்பனும் கூட்டத்தை விலக்கிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தார்கள். திண்ணையில் பங்கஜத்தின் தாய் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாயிருக்கிறாள். ஸ்ரீநிவாசன் "ஏனம்மா" என்று கேட்க, சிவகாமி அம்மாள் "பங்கஜத்தைக் காணோம் ஐயா........மத்தியானமே பள்ளிக்கூடம் சென்ற குழந்தை இன்னும் திரும்பி வரவில்லை. மணி ஏழு—எட்டு இருக்குமே! கோபாலன் போய்த்தேடிப்பார்த்தான்; காணவில்லை. நீங்கள்தான் சற்று தயவுசெய்து தேடிப்பார்க்க மாட்டீர்களா?" என்று மிகவும் இரக்கமாயக் கண்ணீர் வடித்துக் கொண்டே கூறினாள்.

நடேசன் ஸ்ரீநிவாசனை நோக்கி "வா, போவோம்" என்று அவசரத்துடன் சொல்ல, "நில், ஆத்திரப்படாதே. எல்லாம் தெளிவாக அறிந்துகொள்வோம் முதலில்" என்று ஸ்ரீநிவாசன் அமைதியுடன் பதிலுரைத்து, பின்னும் சிவகாமிஅம்மாளை நோக்கி "அம்மா! வீட்டில் ஏதாவது சச்சரவு நடந்தது உண்டா?" என வினவினான்.

சிவகாமி அம்மாள்: "அப்படிக்கொன்று மில்லை ஆனால்..........."

ஸ்ரீநிவாசன். "ஆனால்—என்ன?"

சிவ. "இன்று காலையில் பங்கஜத்துக்கும் அவள் தந்தைக்கும் சற்று மனஸ்தாபம் நேரிட்டது."

ஸ்ரீநி. "அதென்ன மனஸ்தாபம், அம்மா?"

"எங்கள் குடும்ப ரகசியமது. கூறுதல் சரியல்ல" என்று கட்டிலின்மேற படுத்திருந்த பங்கஜத்தின் தந்தையாகிய சுப்பிரமணியபிள்ளை கூறினர் அதற்கு.

ஸ்ரீநி. "ஐயா, அந்த இரகசியத்தை என்னிடத்திலும் சொல்லக்கூடாதோ?"

சுப்பிர. "கூடாது, கூடாது."

ஸ்ரீநி. "சற்று யோசனை செய்து பாருங்கள், காலையில் நடந்த கலகமானது, தற்கொலை செய்துகொள்ளவோ, அல்லது கலகத்திற்குக்காரணமாயிருந்த உமது முகத்தைப் பார்க்க விரும்பாது ஓடிப்போகும்படிக்கோ அவளை (பங்கஜத்தை) தூண்டியிருக்கக் கூடுமல்லவா?"

சுப்பிர. "அவளது நன்மையின் பொருட்டே அச்சிறு கலகம் நேர்ந்தமையால் அவள், நீங்கள் எண்ணுகிறபடி, செய்யத்துணியமாட்டாள்."

தந்தை தாயார் குழந்தைகளுக்கு நன்மை பயக்குமென்று எண்ணிச் செய்யும் சில காரியங்கள் தீமையாக முடியக்கூடுமென்று அறிந்த பெற்றோர்கள் சிலரே. இந்த உண்மையை சுப்பிரமணியபிள்ளையும் அறிந்திரார் போலும். ஸ்ரீநிவாசன் எப்படியாவது கலகத்தின் காரணத்தை அறிந்துகொள்வதாகத் தீர்மானித்துக் கொண்டு, கோபாலனை அழைத்து "பங்கஜத்தை எங்குசென்று தேடினாய்? எல்லாம் விவரமாகச் சொல்" என்றான்.

கோபாலன். "ஆறு மணி மட்டும் காத்திருந்தோம். அக்காள் வீட்டுக்கு வரக்காணோம். என்னைப்போய்ப் பார்த்து வரும்படி அம்மாள் சொன்னாள். நான் பள்ளிக்கூடம் சென்று பார்க்க அது பூட்டப்பட்டிருந்தது. இரண்டொரு பெண்பிள்ளைகள் மட்டும் ஒரு மூலையில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம அக்காளைப்பற்றிக் கேட்க, அவர்களிலொருத்தி, சுமார் ஐந்து மணிக்கெல்லாம் ஒரு பெண்ணோடு பேசிக்கொண்டு ஊஞ்சலிட்டிருக்கும் மரத்தின் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததாகவும் அதற்குப்பின் காணவில்லையென்றும் சொன்னாள். நான் அக்காளுடன் பேசிக்கொண்டிருந்த பெண் யாராயிருக்கலாமென்று கேட்க, அவள் இதற்குமுன் அந்தப்பெண்ணை பார்த்ததில்லையென்றும், அவளுடைய உடையிலிருந்து பெரிய தனவான் மகளாய் இருக்கக்கூடு மென்றும் வயது 25க்கு மேலிராதென்றும அறிவித்தாள் ஒரு வேளை சிங்கார வனத்துக்குப் (Park) போயிருப்பாள் என்று சந்தேகித்து அங்கு சென்று தேடினேன். அங்கும் இல்லை."

சிவகாமி அம்மாள், ஸ்ரீநிவாசனை நோக்கி, அழுதுகொண்டே "நேரமாகிறது போங்கள். என்மனம் நடுங்குகிறது. என் குழந்தைக்கு ஏதோ ஆபத்து ...த்தான்" என்றாள்

ஸ்ரீநி. "அம்மா, பயப்படவேண்டாம். உங்கள் குழந்தை உயிருடன் இருப்பாளாகில் கொண்டுவந்து சேர்க்கிறேன்."

அம்மாள் திடுக்கிட்டு, "ஆ! ஆ!!.... உயிருடன் இருந்தால்—என்கிறீர்களே!..........இறந்து விட்டாளோ? ஆ! பங்கஜம்" என்று புலம்பிக் கொண்டே மண்ணிற் சாய்ந்தாள்; புரண்டாள்; அழுதாள்.

இந்நேரமட்டும் மௌனமாய்நின்றுகொண்டிருந்த

நடேசன் ஸ்ரீநிவாசனை நோக்கி "எல்லாம் அறிந்து கொண்டாயல்லவா? இனியாகிலும் துரிதமாகப் போவோம் வா" என்றான். ஸ்ரீநிவாசன் சற்று ஆலோசனைசெய்து "நான் மட்டும் போக எண்ணுகிறேன்" என்று சொல்ல இருவரும் தங்கள் தங்கள் வீடுநோக்கிச்சென்றனர்.

சிறந்த துப்பறிவதில் மிக வல்லவனான ஸ்ரீநிவாஸன் பங்கஜத்தைத் தேடிப்போகுமுன், பங்கஜத்தைப் பற்றியும் அவளது குடும்பவிஷயங்களைப் பற்றியும் சிறிது கூறுவதவசியம். பங்கஜத்துக்கு இப்பொழுது வயது பதினாறு. மஹாராஜா மாதர் கலாசாலையில் ஐந்தாவது பாரத்தில் வாசிக்கிறாள். இவள் தந்தையாகிய சுப்பிரமணிய பிள்ளை சாலைக்கடையில் மொத்த வியாபாரம் செய்கிறார். பணக்காரர்தான். இப்பொழுது வாதத்தினால் பெரிதும் கஷ்டப்படுகிறார். இவருக்கு இரண்டு குழந்தைகள். பங்கஜம் மூத்தவள்; கோபாலன் அவள் தம்பி; மூனாவது பாரத்தில் வாசிக்கிறான். பங்கஜத்தைத் தன் சகோதரி மகனாகிய சுந்தரத்துக்கு விவாகம் செய்துகொடுக்கவேண்டுமென்று சுப்பிரமணியபிள்ளை அதிக ஆவலுள்ளவராயிருந்தார். சுந்தரம் தாய் தந்தை அற்றவன். இவனுக்கு ரெங்கசாமி என்ற ஒரு சகோதரனிருக்கிறான். ஏதோ ஒரு கொலைக்கேசில் சம்மந்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பாளயங்கோட்டை ஜெயிலிலிருந்து சில வாரங்களுக்கு முன்தான் விடுதலை செய்யப்பட்டான். சுந்தரம் இன்றர்மீடியட் கிளாஸில் வாசித்துக் கொண்டிருந்தான். அவன் கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து நாளடைவில் கெட்ட பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டமையாலும் கல்வியை உபேக்ஷித்தமையாலும் சுப்பிரமணியபிள்ளை கோபங்கொண்டு, அவன் தன் வீட்டில் காலெடுத்து வைக்கக்கூடாதென்று இரண்டு மாதங்களுக்கு முன் திட்டஞ் செய்துவிட்டார். சுந்தரம் மேஜராய்விட்டபடியால் அவனுக்குச் சேரவேண்டும் சொத்தை அவனிடத்தில் ஒப்பித்துவிட்டார். ரெங்கசாமிக்குச் சேரும் சொத்து அவரிடத்திலே இருக்கிறது. சுந்தரம் பங்கஜத்தை எப்படியாவது விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணிப்பலதரம் முயன்றானாயினும், எல்லாம் பயனில்லாமற் போயிற்று.

(தொடரும்.)

T. V. Sankara Kumar.

உத்தரராம சரிதம்.

அங்கம். 1.

37-வது பக்கத் தொடர்ச்சி.

ஸ்ரீமாந் C. N. அநந்தராமய்ய சாஸ்திரியவர்கள் M. A.

ஸீதை:—இது தெளிவுந் தூய்மையுஞ்சேர் கங்காதேவி.

ஸ்ரீரா:—ரகுகுலத்தோர் ஏற்புடைக் கடவுளாய ஏ கங்காதேவி! வணங்குகிறேன். பண்டு எங்குலத்தோராய சகரர் புத்திரர்கள் அவ்வரசனுடைய வேள்விக் குதிரையைத்தேடிப் பூமியைத் துளைத்துச்சென்று கபிலரது கோபத்தியால் சாம்பலாய் விட்டார்கள். பின்னர் பகீரதர், தன்னுசத்தையுங் கருதாது வெகுநாள் அருந்தவம் புரிந்து உன்னீரை அவர்கள்மீது தெளித்து அவர்களை விண்ணேற்றினர். அத்தகைப் பெருந்தகையே! (சுநுஷை) நாட்டுப்பெண்ணாய சானகியை அருந்ததியொப்ப மங்களம் பெருகவாழ்த்துவை;

இலக்:—யமுனைக்கரை வழியாக சித்திரக்கூடஞ் செல்லும் மார்க்கத்தில் பாரத்துவாசர் காட்டித்தந்ததும் ஸ்யாமம் என்ற பேர்பெற்றதுமான வடவிருக்ஷம் இதுதான்.

(ஸ்ரீராமர் யாதும் மொழியாது ஆசை மேலிட்டு உற்றுநோக்குதல்.)

ஸீதை:—தேவரீர் தங்களுக்கு இந்த இடம் நினைவிலிருக்கிறதா?

ஸ்ரீரா:—ஆ! அதை யான் எங்ஙனம் மறப்பேன். இயற்கை மேன்மைவாய்ந்த நின்னுடல், நடையாலிளைத்தது கண்டு நீ இவண் களைப்பாறவில்லையோ.

இலக்:—விந்திய மலைசேர் காட்டில் நம்மைத் தடுத்த விராதன் இவன் தான்.

ஸீதை:—இது பார்த்தது போதும். நான் உத்தமர் கையிலிருந்த விசிறியின் நிழலில் நின்றுகொண்டு, தென்காடு நோக்கிச்செல்வதைப் பார்க்கிறேன்.

ஸ்ரீரா:—மலையின்வீழருவி பாயப்பெற்ற குளிர்மரச் சோலையில் உள்ள தவஞ்செயுமிடங்களே இவை. அக்கானகத்துள் வானப் பிரஸ்தர்கள் பலரும் குற்றேவல்புரிந்து அக்காட்டிற்கிடைத்த புல்லரிசியை அட்டு விருந்தோம்பித் தாமுமுண்டு உய்க்கும இல்வாழ்வார் சிலரும் வசித்தனர்.

இலக்:—நாற்புறமுமடர்ந்த மரக்கூட்டங்களால் அழகும், தட்பமும், கார்நிறமும் வாய்ந்த காட்டினுட்புகும் கோதாவரியாற்றின் முழக்கத்தால் ஒலிக்கும் குகை பொருந்தியதும் நீருண்ட மேகத்தாறை கார்நிறம் பெற்றதும், ஜநஸ்தானத்தின் நடுவின்கட் வாய் நீத்ததுமான ப்ரஸ்ரவண மலைதான் இது.

ஸ்ரீரா:—ஏ! கட்டழகி! அம்மலையில் இலக்குமணன் செய்த பணிவிடைகளைப் பெற்றுக்கழித்த நாட்கள் உனக்கு நினைவு இருக்கிறதா? தெள்ளிய நீர்திரண்ட கோதாவரி அணித்து யாம் ஆடிப் பொழுது போக்கியது உனக்கு ஞாபகமிருக்கிறதா?

இலக்:—இதோ சூர்ப்பனகையின் தர்க்கம்.

ஸீதை:—ஹா! ஆர்யபுத்ரா! நின் சேவை இதுமட்டுமே!

ஸ்ரீரா:—ஏ! பிரிவாலிரங்கும் பேதாய்! இது சித்திரம்!

ஸீதை:—எதாயினுஞ் சரி! தீயோர் துக்கம் உண்டாக்குபவரே.

ஸ்ரீரா:—ஜநஸ்தானச் செய்தி இன்றே நிகழ்வதுபோல் எனக்குத் தோற்றுகிறது.

இலக்:—இதுதான் பாவி அரக்கா வஞ்சனையால் பொன்மயமான பொய்மானின் மாயைச் செய்கை. இம்மாயமானை மர்யச்செய்த பின்னும் அதனுறை துயர் நீக்கவில்லை. பாழடைந்ததாய்த் தோன்றிய ஜநஸ்தாநத்தில் நம்மண்ணல் ஏக்கத்தாற்பட்ட பாட்டான் மலைகளும் நீர்விட்டழுதன; வஜ்ஜிரத்தின்னடுவும் பொடிபட்டது.

ஸீதை:—(கண்ணீர்பெருக) ரகுகுல நாயகமே! என்னைவேண்டி இவ்வளவு துன்பமுற்றீர்களே.

இலக்:—(குறிப்பு நிகழ்த்தும் பார்வையுடன்) உத்தம! இது என்னை?

அடக்கியுமடங்காத் துயரால், கோர்த்த முத்து சிதறி ஓடியாங்கு, கண்ணீர் துளித்து மூக்கும் இதழும் துடித்தலால் அண்ணல் அகத்துறு துன்பம் யார்க்கும் வெளிப்படாதொழியவில்லை.

ஸ்ரீரா:—அக்காலம் காதலியின் பிரிவாற்றேனாயினும் அதனை ஒழிப்பான் வேண்டியே யதனைப்பொறுத்தேன். ஆனால் இப்பொழுதோ என் மனத்தைத் துயர்த்தீ, மர்மஸ்தானத்தை வாட்டும் புண் போன்று என்னை வருத்துகின்றது.

ஸீதை:—ஹா! கஷ்டம் கஷ்டம்! நானும் மிகுந்தெழும் வருத்தத்தால் உத்தமரைப் பிரிந்ததுபோல் கவல்கின்றேன்.

இலக்:—(தன்னுளே) இருக்கட்டும். மற்றொன்று காட்டுவல். (வெளிவிடல்) பனி ஆறாயிரவானுடுக்கு முன்னர் உதித்த குணப் பெருங்குன்றாகிய சடாயுவின் வீரச்செயல்களை வற்புறுத்துவதிது.

ஸீதை:—ஹா! எந்தையே! மக்கள்பா லன்பை நீவிர் நன்கு வெளியிட்டீர்.

ஸ்ரீரா:—ஹ! தந்தையே! காசியப வழித்தோன்றிய புள்ளரசே! நம்போலிய செம்மை வாய்ந்தவரை இனி எங்கு காண்பேன்.

இலக்:—தண்டகவனத்து ஜநஸ்தாநத்தின் மேற்புறத்துளதும் குஞ்சவான் எனப் பெயர் பெற்றதுமான இம்மலைதான் கபந்தன் தங்கிய இடம்.—இதுதான் அதற் கணித்தான மதங்கமுனியின் ஆச்சிரமம்.—இதுதான் அருந்தவம்புரி சவரி.—இதுதான் பம்பை யென்னும் தாமரைப் பொய்கை.

(தொடரும்)

பற்பல குறிப்புகள்.

விருக்ஷங்களின் ஜீவிதகாலம்: விருக்ஷங்கள் நீடித்த காலம் வாழ்கின்றனவென்று தத்துவசாஸ்திரிகள் அனுமானிக்கின்றார்கள். ஐரோப்பாவில் கி. பி. 1052-ம் வருஷம் முதற்கொண்டே ஜீவித்துவருகின்ற

அநேக மரங்கள் இருக்கின்றனவாம். இற்றலிதேசத்தின் ஒரு மாகாணமான லாம்பார்டி (Lombardy) யில் உள்ள ஸோமா ஸைப்ரஸ் (Soma Cypress) எனனும் மரம் 12 அடி நீளமும் 23 அடி சுற்றளவும் உடையது. இந்த மரம் கிறிஸ்து பிறக்கிறதற்கு நாற்பது வருஷங்களுக்குமுன் தொடங்கியே நின்றுவருகின்றதாம்.

இங்கிலாந்தில் "நீரூற்று மடம்" (Fountains Abbey) என்றழைக்கப்படுகின்ற கிறிஸ்தவ சன்னியாசி மடத்தில், பெரிய ஓர் யூமரம், அந்தமடம் ஸ்தாபிக்கப்பட்ட 1133-ம் வருஷம் தொடங்கி நின்றுவருகின்றதென்றும் 1300 வயதுடையது என்றும் கருதப்படுகிறது.

தென் அமெரிக்காவில் ப்ரேஸில் (Brazil) என்னும் இராஜ்ஜியத்தில் பயிராகின்ற சில தென்னைமரங்கள் 600 முதல் 700 வருஷங்களளவும் வாழ்கின்றனவாம். அரேபியதேசத்துப் பேரீத்தமரம் 2 0—300 வருஷங்கள் வரையும் வளரும்.

கொட்டபாக்ஸி (Cotapaxi) என்னும் எரிமலையில் 1744-வது வருஷம் உண்டான அக்னிகம்பத்தின் பேரிடி முழக்கம் 600 மைல் தூரத்துக்கு அதிகமாகக்கேட்டது.

சீனதேசத்தின் வட எல்லையை ஒட்டிக் கட்டப்பட்டிருக்கும் மதிலே பூலோகத்திலுள்ள எல்லாமதில்களிலும் மிகப் பெரிதானது. அது கி. மு. சுமார் 220-ம் வருஷம் 'டார்ட்டர்' (Tartars) என்னும் அயல் நாட்டாரைத் தடுத்து நிறுத்துமாறு சீனர்களால் கட்டப்பட்டது. இந்த மதில் பெரிய மலைகளின் மீதும் ஆழமான பள்ளத்தாக்குகளின் ஊடாகவும் ஆறுகளின் குறுக்காகவும் இன்னும் அநேகவிதமான இடைஞ்சல்களுக்கிடையிலும் செல்கின்றது. அதன் நீளம் 1250 மைல். 5 அடி உயரமுள்ள ஒரு கைபிடிச்சுவர் உட்பட அதன் மொத்த உயரம் 20 அடி. அடிக்கனம் 25 அடி. மேற்கனம் 15 அடி.

பூலோகத்திலுள்ள கோயில் மணிகள் எல்லாவற்றிலும் பெரியது, ரஷ்யாவில் மாஸ்கோவென்னுமிடத்திலிருக்கின்றது. அதனுடைய அடிப்பாகத்தின் சுற்றளவு சுமார் 68 அடி. அதன் உயரம் 21 அடிக்கு அதிகம். மிகவும் கட்டியானவிடத்தில் அதன் திண்ணம் 23 அங்குலம். அதன் நிறை 433,722 ருத்தல் என்று நிறுக்காமலே கணக்கிடப்பட்டிருக்கிறது.

சமுத்திரத்தின் கூடின ஆழம் எட்டேமுக்கால் மைல். சராசரி ஆழம் 12000 முதல் 18000 அடிவரையிலும்.

கழுகு சில வேளைகளில் மணிக்கூறுக்கு 100 மைல் வேகத்திற் பறக்கின்றதாம். வேற்று நாடுகளுக்குச் செல்லும்பொழுது காட்டுத்தாரவும் ஊர்க்குருவியும் மணிக்கூறுக்கு 90 மைல் வேகத்திற் செல்கின்றன. சாதாரணமாக இந்தியாவில் புகைவண்டி செல்லும் வேகம் மணிக்கூறுக்கு 25 மைல். இந்த வேகத்துடன் நாம் சாதாரணமாகக் காணும் காகம் பறக்கின்றது.

க்ரீன்லன்ட் (Greenland) தேசத்துக் கருகாமையிலுள்ள கடலில் வாழ்கின்ற ஒரு திமிங்கிலத்தின் நிறை 100 டண் அல்லது 224,000 ருத்தல் என்று நில்ஸண் என்பவர் கணக்கிட்டிருக்கிறார். இந்தக் கனம் 88 யானைகளுடையவோ அல்லது 440 காடிகளுடையவோ கனத்துக்கு நிகராம். அப்பேர்க்கொத்த திமிங்கிலத்தில் இருக்ககூடிய எலும்பு 3360 ருத்தல் கனமுள்ளது. அதன் கொழுப்பிலிருந்து 40 முதல 70 டண் வரையிலும் கனமுள்ள எண்ணெய் எடுக்கலாம்.

ஒரு பையன் தன் சிநேகிதனிடத்திற் சென்று "நான் உன்னிடத்தில் ஒரு காரியத்தைப் பற்றிப் பேசப்போகிறேன். அதற்கு நீ உன் சம்மதத்தைத் தருவாயோ" என்று மிகுந்த ஜாக்கிரதையுடன் கேட்டான். அதற்கு மற்றவன் கொஞ்சங்கூட ஜாக்கிரதையோடு "நான் சம்மதிப்பேன்" என்று உன் மனதிற்குப்படுமானால் அந்த சங்கதியைப்பற்றிப் பேசினால் போதும் என்றான்.

ஒரு நியாய ஸ்தலத்தில் ஒரு வேட்டைக்கேஸ் சம்பந்தமாக வைரவனிடமிருந்து மொழிவாங்கிக்கொண்டிருந்தார்கள். மாஜிஸ்ட்ரேட் சாக்ஷியை நோக்கி, "துப்பாக்கியிலிருந்து வெடிதீர்ந்ததை நீ கண்டாயா?"

வைரவன். "இல்லே, ஐயா வெடிச் சத்தத்தைக் கேட்டேன்" என்று எட்டுக்கொடுக்காமல் மொழி பகர்ந்தான்.

மாஜி. "இந்த சாக்ஷியம் தகுந்ததல்ல ; நீ இறங்கு" என்று கம்பீரத்துடன் கட்டளையிட்டார்.

உடனே வைரவன் கூட்டைவிட்டுக் கீழிறங்கிப் போகப் புறப்பட்டான் ; அவன் தன் முதுகைத் திருப்பினதும் கொல்லென நகைத்தான். மாஜிஸ்ட்ரேட் சாக்ஷி கோர்ட்டை ஆக்ஷேபித்தான் என்று மிகவும் சினந்தவராய் அவனைக் கூப்பிட்டு, "நியாயஸ்தலத்தில் வைத்து எப்படிச் சிரிப்பாய், நீ" என்று தன் முழு உத்தியோக கம்பீரத்துடனும் கேட்டார் 'நான் சிரித்ததை சுவாமி கண்டீர்களா?" என்றான் குற்றவாளி. மாஜிஸ்ட்ரேட் கண்களில் தீப்பொறி பறக்க "காணவில்லே, ஆனால் நீ சிரித்ததை காதல்லவா கேட்டேன்" என்றார். வைரவன் 'அந்த சாக்ஷியம் உதவாது' என்று சாவதானமாகவும் கண்ணைச் சிமிட்டிக்கொண்டும் சொன்னான். அப்பொழுது மாஜிஸ்ட்ரேற்றைத் தவிர மற்றெல்லோரும் நகைத்தார்கள்.

ஒரு விவாஹம்:—சென்ற மாதத்தில் பம்பாயில் 1872-ம் வருஷத்து 3-வது சட்டப்படி மிஸ். இஞ்சினிர் M. A. என்ற ஒரு பார்சி ஸ்திரீ மிஸ்டர் தேசாயி M. A. என்ற ஒரு ஹிந்து கனவானை விவாகம் செய்து கொண்டாள். இதற்குப் பல பிரபுக்கள் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வாதம் செய்தார்களாம்.

அமெரிக்க ஸ்திரீகள்:—ஜெர்மனிக்கும் அமெரிக்க ஐக்ய மாகாணத்துக்கும் யுத்தம் உண்டாகிவிட்டது. வெகு குதூகலத்துடன் அமெரிக்க தேச ஸ்திரீகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து தேசஉபகாரத்திற்காகப் பல வேலைகளைச் செய்ய முன்வருகிறார்களாம். புருஷர்கள் யுத்தத்துக்குப் போய்விட்டால் அவர்களுடைய வேலைகளை ஸ்திரீகள் வகித்துச் செய்வார்களெனத் தெரிகிறது.

ஸ்திரீ வக்கீல்கள்:—இங்கிலாந்தில் ஸ்திரீகளும் வக்கீல்களாகச் சேரலாமென்று ஒரு மசோதா வந்திருப்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. அமெரிக்காவில் வெகு வருஷங்களுக்கு முன்னதாகவே ஸ்திரீகளும் கோர்ட்டுகளில் வக்கீல்களாக ஆஜராகலாமென்று ஏற்பட்டுவிட்டதாம்.

போர் முகத்தில் ஸ்திரீகள்:—பிரான்சுப் போர்முகத்திற்குப் பின்னே ஸ்திரீவேலைக்காரர்களை வேலைக்குவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சுமார் 5000 ஸ்திரீகள் பிரான்சுக்கு இங்கிலாந்திலிருந்து பழக்கி அனுப்பப்படுவார்களாம். 200 பேர் வீதமாக அனுப்பப்படுவார்களென்று தெரிகிறது.

ஸ்திரீ பிரசங்கிகள்:—ஜப்பானில் படித்த ஸ்திரீகள் சேர்ந்து "ஜப்பானிய ஸ்திரீகள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். அதனதிகாரிகள் ஸமீபத்தில் ஒரு மீட்டிங்கு கூடி கிராமம் கிராமமாக சுகாதாரத்தையும், குழந்தைகளைக் காப்பாற்றும் விதத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்ய ஸ்திரீ பிரசங்கிகளைப் பழக்கிவருகிறார்கள்.

பாலைக் காப்பாற்றும் வகை:—பாலைக் காய்ச்சிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து ஆவி எழும்பிக்கொண்டிருக்கும்பொழுதே ஒரு பாத்திரத்தில் அடைத்துப் பத்திரமாய் மூடி வைக்கலாம். பாலைக் காய்ச்சாமல் சர்க்கரையையும் சோடா ஜலத்தையும் சேர்த்து ஒரு பாத்திரத்திலாகாயம் உட்கொள்ளாதபடி மூடிவைக்கலாம். பாலைக் கொஞ்சம் சூடாயிருக்கும்போது சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி கட்டியாய்ப் போனபிறகு வெயிலில் உலர்த்திக் காற்றுப் போகாதபடி வைத்துக் கொள்ளலாம். வேண்டும்போதில் கொஞ்சமெடுத்து தண்ணீரில் போட்டால் அது சேர்த்தியான பாலாகும்.

விளம்பரம்.

பலதீபிகை:—சோதிடம் பயில இதுவே சிறந்த வழிகாட்டி. கால புருஷ அங்கம் முதல் லத்தா பலன் வரை விரிவாய் எடுத்துரைக்கவல்லது 26 அத்தியாயங்கள் அடங்கிய 236 பக்கங்கள் கொண்டது. காலிகோ பைண்ட் ரூ 1—8—0

சோதிட கணிதம்:—சுதேச விராஜிமானம் கிரக லக்கின ஸ்புடங்கள் ஆம் இவைகளை நன்கறியும் ஆற்றல் விளக்கவல்லது. ராப்பர் பைண்ட் ரூ 1—4—0.

புட்பபர்சம்—மழை வளமும் உண்மையின்மையும் கூறி இவ்வகைப் பயிர் லாபம் உண்டெனவும் கூற வல்லது.

ராப்பர் பைண்ட் ரூ 0—4—0.

இப்புத்தகங்களுக்கு வி. பி. செலவு பிரத்தியேகம்.

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி,
1, ஏகாம்பர ஆசாரி வீதி,
பறங்கிப்பேட்டை.